பக்கங்கள்: பத்து

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6.00

சுடர்:15 வள்ளுவர் ஆண்டு 2031 சித்திரை 13 செவ்வாய்க்கிழமை (25-04-2000) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:128

# யாழ்ப்பாணத்தை ராணுவம் விடாது தக்கவைத்திருக்கும்



## தளபதி ஸ்ரீலால் வீரசூரியா உறுதி

கொழும்பு,ஏப்ரல்25

**யாழ்ப்பாணத்தை இராணுவம் தொடர்ந்து தக்கவைத்திருக்கும் என்பதில் நாம் மிகவும் நம்பிக்கையும் உறுதியும் கொண்டிருக்கின்றோம்.**

**- இவ்வாறு கூறியிருக்கின்றார் ஸ்ரீலங்கா இராணுவத்தளபதி லெப்டினன்ட் ஜெனரல் ஸ்ரீலால் வீரசூரியா.**

கடற்படை, விமானப்படைத்தளபதிகள் சகிதம் கொழும்பு இராணுவத் தலைமயகத்தில் வைத்து நேற்று முன்னிரவு செய்தியாளர்களுக்கும் தொலைக்காட்சி சேவைகளுக்கும் தனித்தனியாக வழங்கிய பேட்டிகளிலேயே அவர் இவ்வாறு கூறினார். அந்தப் பேட்டிகளில் அவர் மேலும் கூறியதாவது:-

யுத்தம் புரியும் போது களநிலைகளுக்கு ஏற்ப இடங்கள், நிலை

(10ஆம் பக்கம் பார்க்க)

## ஆனையிறவு இராணுவத்தள இழப்பு படையினருக்குப் பெரும் பின்னடைவு!

### இந்தியாவிலிருந்து ரணில் பேட்டி

கொழும்பு,ஏப்.25

வெற்றிகொள்ளப்பட முடியாதது எனக் கருதப்பட்ட ஆனையிறவுத் தளத்தை படையினர் இழந்தது பாரதூரமான பின்னடைவாகும்.

ஐ.தே.க. தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

தீவிரமடைந்துள்ள போர் நிலைவரம் தொடர்பாக அவர் இந்தியாவில் இருந்தவாறு தொலைக்காட்சிக்கு தொலைபேசி மூலம் நேற்று பேட்டி அளித்தார். அப்போது அவர் தெரிவித்ததாவது:-

ஆனையிறவுப் படைத்தளத்தை இழந்ததை அரசு இப்போது ஒப்புக் கொண்டுள்ளது. இந்த இழப்பு எனக்குப் பேரதிர்ச்சியைத் தந்துள்ளது.

இது நமது யுத்த தந்திரோபாயங்களைத் தோல்வியுறச் செய்து பெரும் பாதக நிலையை எமக்கு ஏற்படுத்தியுள்ளது.

1983 முதல் இலங்கை இராணுவம் ஆனையிறவுத் தளத்தை வைத்திருந்தது. அது எப்போதும் வெற்றி கொள்ளப்பட முடியாதது என நான் கருதிவந்தேன்.

எனவே இது மிகவும் பாரதூர

(10ஆம் பக்கம் பார்க்க)

## சக்திமிக்க 5 ஆட்லறிகளை மீட்டதாக புலிகள் அறிவிப்பு!

### படைத்தரப்பில் மறுப்பு

யாழ்ப்பாணம்,ஏப்.25

"ஆனையிறவுப் பெரும் தளப்பிரதேசத்தில் இருந்து நெடுந்தூர ஆட்லறிப் பீரங்கிகள் ஐந்து உட்பட பல கோடி ரூபா பெறுமதியான இராணுவப் போராயுதங்களைக் கைப்பற்றி இருப்பதாக விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

சீனாவிடம் இருந்து வாங்கப்பட்ட 152 மில்லி மீற்றர், 122 மில்லி மீற்றர் தொலைவீச்சு ஆட்லறிப் பீரங்கிகளே தம்மால் கைப்பற்றப் பட்டிருப்பதாகப் புலிகள் தெரிவித்துள்ளனர்.

152 மில்லி மீற்றர் ஆட்லறிப் பீரங்கிகள் மூன்று, 122 மில்லி மீற்றர் ஆட்லறிப் பீரங்கிகள் இரண்டு, 120 மில்லி மீற்றர் எறிகணை மோட்டார்கள் 12, 25 மில்லி மீற்றர் பீரங்கி ஒன்று ஆகியனவே கைப்பற்றப்பட்ட உயர் பேராயுதங்கள் என்றும் -

இவற்றைவிட ஆனையிறவு, சோரன்பற்று, இயக்கச்சிப் பகுதிகளில் இருந்த இராணுவ உணவுக் களஞ்சியங்கள் பலவும் தம்மால் கைப்பற்றப்பட்டிருப்பதாகவும் -

பெருமளவு ரவைகள், 50 கலிபர் துப்பாக்கிகள், ஜி.ரி.எம். ஜீக்கள்,

(10ஆம் பக்கம் பார்க்க)

## பாரிய பதில் தாக்குதலுக்கான முன்னேற்பாட்டு நடவடிக்கை!

### படைவாபஸ் குறித்து இராணுவப் பேச்சாளர்

கொழும்பு,ஏப்.25

"ஆனையிறவில் தந்திரோபாயம் கருதிப் படையினர் தமது நிலைகளை மாற்றியமைத்துள்ளனர். இது விடுதலைப் புலிகள் மீது பாரிய அளவில் பதில் தாக்குதல் ஒன்றை ஆரம்பிப்பதற்கான பிரதான முன்னேற்பாட்டு நடவடிக்கையாகும்."

இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் பாலித பெர்னான்டோ இவ்வாறு தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற வாராந்த செய்தியாளர் மாநாட்டில் அவர் மேலும் கூறியதாவது:-

ஆனையிறவுக்கு வடக்கே இராணுவ நவடிக்கைகளை மேற்கொள்வதில் எந்தவித இடையூறுகளும் இல்லை. இராணுவத்தின் பாதுகாப்பு நடவடிக்கைகளைத் தொடர்ந்து மேற்கொள்ளக்கூடிய நிலையிலேயே உள்ளனர். களநிலைமை காரணமாக படையினர் தந்திரோபாயமாக வாபஸ்பெற்று வேறு இடங்களில் வலுவான நிலைகளை அமைத்து வருகின்றனர். புலிகளால் படையினருக்கு ஏற்படும் இழப்புக்களை தவிர்க்கும் நோக்குடனேயே இந்தத் தந்திரோபாய இடமாற்றம் மேற்கொள்ளப்பட்டது.

இந்தத் தந்திரோபாய நடவடிக்

(10ஆம் பக்கம் பார்க்க)

## காயமடைந்த படையினரை மகாநாயக்கர்கள் சந்தித்தனர்

கொழும்பு,ஏப்.25

ஆனையிறவு யுத்த முனையில் காயமடைந்து தெற்கின் பல்வேறு ஆஸ்பத்திரிகளிலும் சிகிச்சை பெற்றுவரும் படையினரை மகாநாயக்கர்கள் மற்றும் பௌத்தபிக்குகள் நேற்றுச் சென்று பார்வையிட்டனர்.

இவர்களுடன் பிரதி அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோரும் காயமடைந்த படையினரைப் பார்வையிட்டனர். அவர்களின் சேமநலன்கள் குறித்தும் கேட்டறிந்து கொண்டனர்.

இதேவேளை -

ஆனையிறவுச் சமரில் காயமடைந்து கொழும்பு இராணுவ ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ள படையினரின் சேமநலனுக்காக நேற்று அங்கு விசேட வழிபாடுகளும் நடத்தப்பட்டன. (ஐ-7)

## பதில் பாதுகாப்பு அமைச்சராக அனுருத்த ரத்வத்தையே கடமை

### ஜனாதிபதி செயலகம் தெரிவிப்பு

கொழும்பு,ஏப்.25

வைத்திய சிகிச்சைக்காக ஜனாதிபதி வெளிநாடு சென்றதையடுத்து பதில் பாதுகாப்பு அமைச்சராக பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்தையே கடமையாற்றி வருகின்றார் என்று ஜனாதிபதி செயலகம் நேற்று மாலை விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

- ஜனாதிபதி நாட்டில் இல்லாத வேளை பதில் பாதுகாப்பு அமைச்சராக ஜெனரல் அனுருத்தரத்வத்த நியமிக்கப்படவில்லை என்று சில செய்தி ஊடகங்களில் வெளியான செய்திகளை ஜனாதிபதி செயலகம் அந்த அறிக்கையில் மறுத்துள்ளது.

பதில் பாதுகாப்பு அமைச்சராக ஜெனரல் அனுருத்தவே கடமையாற்றுவதாக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இதேவேளை -

யுத்தம்தொடர்பான அனைத்து நடவடிக்கைகளும் வெளிநாட்டில் தங்கியுள்ள ஜனாதிபதி வழங்கும் பணிப்பின் பேரிலேயே மேற்கொள்ளப்படுவதாகவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பலியான படையினருக்காக வெளிநாட்டில் இருந்தபடி ஜனாதிபதி அனுதாபம்

கொழும்பு,ஏப்.25

ஆனையிறவில் கடந்த சில தினங்களாக நடைபெற்ற போரில் உயிரிழந்த படையினரின் குடும்பங்களுக்கு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க வெளி நாட்டில் இருந்தவாறு அனுதாபம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பான ஜனாதிபதியின் அறிக்கையை ஜனாதிபதி செயலகம் நேற்று வெளியிட்டது.

கடந்த ஐந்து தினங்களாக நடைபெறும் யுத்தத்தில் நாட்டின் இளைஞர் சமுதாயம் அழிந்து செல்வது குறித்துதான் கவலையடைவதாகவும் இந்த நிலை மாற்றப்பட வேண்டும் என்றும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

உயிரிழந்த படையினரின் பணிகள் நாட்டின் வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்படும் என்றும் தமது செய்தியில் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

உயிரிழந்த படையினரின் இறுதிச் சடங்குகளை மேற்கொள்ள விசேட ஏற்பாடுகளைச் செய்யுமாறும் அதிகாரிகளுக்கு ஜனாதிபதி பணித்துள்ளார்.

இதேவேளை -

தற்போது ஏற்பட்டிருக்கும்நெருக்

(10ஆம் பக்கம் பார்க்க)

## வெளியேறிய படையினர் புதிய நிலைகளில் தரிப்பு

யாழ்ப்பாணம்,ஏப்.25

ஆனையிறவுப் பெருந்தளத்தில் இருந்து வாபஸ் பெறப்பட்ட படையினரில் ஒரு பகுதியினர் தென்மராட்சிப் பகுதியில் சில பாடசாலைகளில் தங்கி உள்ளதாகத் தெரிய வருகிறது.

வெளியேறிய படையினரில் ஒரு பகுதியினர் கிளாலி வழியாக தென்மராட்சி பகுதிக்கும் - மற்றொரு தொகுதியினர் நாகர்கோவில்ஊடாக வடமராட்சிப் பகுதிக்கும் சென்றிருப்பதாக கொழும்பு செய்தி வட்டாரங்களில் தெரிவிக்கப்பட்டது.

தென்மராட்சியில் வரணி மகா வித்தியாலயம் மற்றும் புளை மத்திய கல்லூரி, உசன் இராமநாதன் மகாவித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் தங்கியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

படையினர் தங்கி இருப்பதால் சில பாடசாலைகள் இயங்க முடியாத நிலை ஏற்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-3-133)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# மரக்கன்றுகள் விநியோகம்

வலி.கிழக்கு,ஏப்.25

சமுர்த்தித் திட்டத்தின் கீழ் மக்களுக்குப் பயன்தரு மரங்களை வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

புளி, தென்னை போன்ற மரங்களை சமுர்த்தி வலயங்கள் ஊடாகக் கிராம சேவையாளர் பிரிவுகள்தோறும் வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகச் சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ-180)

## திரு.க.அருந்தவராசா அவர்களது சேவை நயப்புரை

அன்பு நெறியும் சேவை மனப்பான்மையும் ஒன்றிணையும் போது சமுதாயம் மலர்வடையும். இந்த அடிப்படையில் நாட்டுக்கும், மக்களுக்கும் நற்பணியாற்றி ஓங்கிநிற்பது ஸ்ரீ லங்கா புனித ஜோண் அம்புலன்ஸ் படையாகும். இந்நிறுவனத்தில் கடந்த முப்பது ஆண்டுகளாக நற்பணியாற்றி அனைவராலும் பாராட்டப்படுபவர் திரு.க.அருந்தவராசா அவர்கள். கல்லூரி வாழ்க்கையிலும் குடும்ப வாழ்க்கையிலும் சமூக நலன்பேணும் வாழ்க்கையிலும் தன்னிகர் அற்று ஓங்கி நிற்பவர் இவர்.

மாணவனாகக் கல்வி கற்ற காலந் தொட்டு இன்று வரை கடமை உணர்வோடு காலத்தைக் கழிப்பவர் இவர். சேவையாளனாகத் தன்னை உயர்த்தி நிற்கும் திரு.அருந்தவராசா அவர்களை நான் பெரிதும் பாராட்டுகின்றேன்.

இன்னும் பல்லாண்டு காலம் இவரும் இவர் தம் துணைவியும் பிள்ளைகளும் சமூக நலன் பேணி உயர் வாழ்வு வாழ்ந்து மகிமையடைய வேண்டுமென்று திருவருளைப் பிரார்த்தித்து அமைகின்றேன்.

**கலாநிதி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி**
*சமாதான நீதிபதி*
*தலைவர்,*
*ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,*
*தெல்லிப்பழை, ஸ்ரீ லங்கா.*

(C/11955)

## மரண அறிவித்தல்

### திருமதி மேபிள் இலட்சுமிப்பிள்ளை பூதத்தம்பி

கரவெட்டி கிழக்கு களைச்சந்தோட்டத்தைச் சேர்ந்த திருமதி மேபிள் இலட்சுமிப்பிள்ளை பூதத்தம்பி நேற்று (24-04-2000) திங்கட்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற ஐ.எஸ்.பூதத்தம்பியின் (சட்டவரைஞர் திணைக்களம்) அன்பு மனைவியும், ஈ.பி.சச்சிதானந்தன் (பொறியியலாளர், ஆஸ்திரேலியா), செல்வராணி ஆகியோரின் அன்புத் தாயாரும், நியோமியின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (25-04-2000) செவ்வாய்க் கிழமை பிற்பகல் 3 மணிக்கு இலங்கை பெந்தேகோஸ்தே சபை, 111, கண்டி வீதி, சுண்டிக்குளியில் நடைபெற்றுப் பூதவுடல் நல்லடக்கத்துக்காக கொட்டடி சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*கரவெட்டி கிழக்கு,*
*கரவெட்டி.*

(75737)

தகவல்:
K.செல்வம்
(படப்பிடிப்பாளர்)


## ராஜா

யாழ்ப்பாணம்
*அஜித், ஷாலினி*
நடிப்பில்
**அமர்க்களம்**
காட்சிகள்
10.30, 2.30
(C/11604)

## நாகம்ஸ்

சுன்னாகம்
**ரஜனி, சௌந்தர்யா, ரம்பா, செந்தில்**
நடிப்பில்
**அருணாச்சலம்**
(ரீல்ஸ்)
காட்சிகள்
11.00, 2.30
(புதிய நேரம்)
(C/11760)

## லிபேட்டி

அச்சுவேலி
மோகன், சந்திரசேகர்
நடித்த
நினைக்கத் தெரிந்த மனமே
**(குடும்பச் சித்திரம்)**
காட்சிகள்: 10.30, 2.30
T.P- 070-212223
- 070-212678
FAX No. 0094 - 70212223
(75694)

## ஸ்ரீ செல்வா திரையரங்கு

(ஸ்ரான்லி வீதி)
தினசரி காட்சிகள்-10.30-2.30
(பழையநேரம்)
**சத்தியராஜ், குஷ்பு, செந்தில்,அருண்பாண்டியன்**
நடித்த
**வீரநடை**
(புதிய வெளியீடு)
(75735)

## SHAMROCK
**A/L 2002**
**புதிய பிரிவு**

கிறிஸ்.- Mrs. A. மல்லிகா
இந்து.- Mr. நித்தி
புவி.- Mr. இராஜா
தமிழ்- Mr. அருள்
நாடகம்- Mr. ஜோண்சன்
அளவை- Mr. மகிந்தன்
ECON.- Mr. இராஜேஸ்வரன்
ENG.- Mr. ரமணதாஸன்
I.Q.- Mr. தவசேகர்

* O/L DAY CLASS
* G. A. Q. 2000-PAPER

(C/11953)


# விவரங்கள் சேகரிப்பு

தென்மராட்சி,ஏப்.25

பளைப் பிரதேசத்திலிருந்து இடம்பெயர்ந்துள்ளோரில் ஆயிரத்து 500ரூபாவுக்கு மேற்பட்ட வருமானமுள்ள 'உ' பங்கீட்டு அட்டை வைத்துள்ள குடும்பங்களின் விவரங்கள் பிரதேச செயலகத்தினால் சேகரிக்கப்பட்டுவருகின்றன.

'உ' பங்கீட்டு அட்டையை வைத்துள்ள குடும்பங்கள் தங்கள் விவரங்களை மீசாலை, புத்தூர் சந்தியிலுள்ள கமநல சேவைகள் நிலையத்தில் இயங்கும் பளைப் பிரதேச செயலகத்தில் பதிவு செய்யுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-117)

## வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

மலர்வு
29
-
04
-
1951



உதிர்வு
26
-
03
-
2000

### இராஜகுலஅரியரத்தினம் ஜேயேந்திரராசா

26.03.2000 அன்று சிவபதமடைந்த எமது அன்பு மகன் ஜேயேந்திரராசாவின் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும், எமது துயரில் பங்கு கொண்டு ஆறுதல் கூறியோருக்கும் மற்றும் பல வழிகளில் உதவிகள் புரிந்தவர்களுக்கும் இதய பூர்வமான நன்றிகளைத் தெரிவிப்பதுடன் இன்று (25-04-2000) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திக் கிரியைகளிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பிரிவால் துயருறும்
**அப்பா, அண்ணன், அண்ணி, பெறாமக்கள், மருமகள், பேர்த்தி.**

பதிவுகாரர் ஒழுங்கை,
உடுப்பிட்டி.

(75707)


KOBE KOBE KOBE KOBE KOBE

## நீங்கள் வாங்கும் பொருள் தரமானதா?

**உங்கள் பணத்திற்கு நாங்கள் உத்தரவாதம் தருகின்றோம்.**

**உங்களுக்குத் திருப்தி இல்லையெனில் முழுப்பணத்தையும் மீளப்பெறும் வசதியோடு வருகின்றன!**

# KOBE

## அன்டனாக்களும் பூஸ்டர்களும்

**இலங்கையில் விற்பனையில் முதலிடம் வகிக்கும் தரமான பொருள்கள்**

உங்களுக்கு அபிமான தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை தங்கு தடையின்றி தெட்டத் தெளிவாகப் பார்த்து மகிழ வேண்டுமா?

*கவலை வேண்டாம்!*

*இப்போது!*

32 வெவ்வேறு வடிவங்களில் அன்டனாக்களும், 21 வடிவங்களில் பூஸ்டர்களும்

**இலங்கையில் எப்பாகத்திலும் பாவனைக்குகந்த தரத்துடன் கிடைக்கின்றது.**

**LANKA NIPPON**


No. 18, Keyzer Street, Colombo - 11
Tel: 437735 Fax: 437736
No. 10, Trelawny Place,
(Behind Milk Bar)
Bambalapitiya Junc. Colombo - 4
Tel:589992

**'KOBE தரத்தின் சின்னம்'** (C/11883)

KOBE KOBE KOBE KOBE KOBE


## நீங்காத நினைவுடன் ஓராண்டில்...

மலர்வு
09
-
02
-
1938



உதிர்வு
07
-
05
-
1999

அமரர்

### சுப்பிரமணியம் விநாயகஈஸ்வரன்

**திதி: 25.05.2000**

பாசத்தின் அணையாத தீபமாய்
அன்புக்கு அடையாளச் சின்னமாய்
பண்பும் பரிவும் கொண்ட எந்தையே!
அறிவுடன் நேரிய வழி நிற்க
உறுதுணையாய் நின்றவரே–எம்
இதயக் கோயிலில் இடம் நிறுத்தித்
துதிப்போமாக!

*பிரிவால் துயருறும்*
**மனைவி, பிள்ளைகள்.**

22,இராஜவரோதயம் வீதி,
திருகோணமலை.

(75713)

# தீவிரவாதிகளின் தாக்குதலில் 80 ரஷ்யப் படையினர் உயிரிழப்பு

குறோஸ்னி, ஏப்ரல் 25

செச்சினியாவில் தீவிரவாதிகள் நேற்று முன்தினம் நடத்திய தாக்குதலில் ரஷ்யப் படையினர் 80 பேர் கொல்லப்பட்டனர்; 18 கவச வாகனங்கள் அழிக்கப்பட்டுள்ளன என்று செச்சினியத் தீவிரவாதிகள் அறிவித்துள்ளனர்.

செச்சினியாவின் தென் பகுதியில் சென்றுகொண்டிருந்த 23 கவசவாகனங்களைக் கொண்ட தொடரணி ஒன்றின் மீதே மேற்படி தாக்குதல் நடத்தப்பட்டதாகவும் அவர்கள் கூறினார்கள்.

செச்சினியா மீது படையெடுத்துக் குறோஸ்னியைக் கைப்பற்றித் தீவிரவாதிகளை அடக்கிவிட்டதாக ரஷ்யா அறிவித்தபின்னர் செச்சின் தீவிரவாதிகளால் நடத்தப்பட்ட முதலாவது பெரும் தாக்குதல் இது என்று தெரிவிக்கப்படுகிறது.

இதனைத் தொடர்ந்து செச்சினியா மீதான ரஷ்யத் தாக்குதல்கள் இப்போதைக்கு முடிவுக்கு வரப்போவதில்லை என இராணுவ ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

(இ-6-ரி-9)

# ஜோர்டான் மன்னரின் விஜயம்: இஸ்ரேல் - பலஸ்தீன சிக்கலை தீர்ப்பதற்கான அரிய சந்தர்ப்பம்

## பிரதமர் எகுட் பராக் தெரிவிப்பு

டெல்அவிவ், ஏப்ரல் 25

ஜோர்டான் மன்னர் அப்துல்லாவின் இஸ்ரேல் விஜயம் பலஸ்தீனப் பிரச்சினையைத் தீர்க்க உதவும் ஒரு பொன்னான சந்தர்ப்பம் என்று இஸ்ரேலியப் பிரதமர் எகுட் பராக் கூறினார்.

இஸ்ரேலுக்கு முதன் முதலில் விஜயம் மேற்கொண்டுள்ள மன்னர் அப்துல்லாவை வரவேற்று உரையாற்றிய போதே பிரதமர் பராக் மேற்கண்டவாறு கூறினார்.

மன்னர் அப்துல்லா இந்த விஜயத்தின் போது, சிரியா மற்றும் லெபனானுடனான இஸ்ரேலின் சமாதானப் பேச்சு மற்றும் மேற்குப் பிராந்திய அமைதி நிலை என்பன குறித்து பிரதமர் பராக்குடன் பேச்சு நடத்துவார் எனக் கூறப்படுகிறது.

அத்துடன் ஜோர்டானுக்கும் இஸ்ரேலுக்கும் இடையேயான உறவு மேம்பாடு குறித்தும் அவர்கள் பேசுவார்கள் எனத் தெரிய வருகிறது.

(இ-6-ரி)

**உலக அரங்கில்**

### பிலிப்பைன்ஸ் நடவடிக்கையின் எதிரொலி?

# உல்லாசப் பயணிகள் உட்பட 20.பேர் மலேசியாவில் கடத்தப்பட்டனர்!

## இஸ்லாமியத் தீவிரவாதிகள் கைவரிசை

கோலாலம்பூர், ஏப்ரல் 25

மலேசியாவின் கிழக்குப் பகுதி ஒன்றில் வெளிநாட்டு உல்லாசப் பயணிகள் சிலர் உட்பட 20 பேரைத் தீவிரவாதக் குழு ஒன்று பணயக் கைதிகளாகப் பிடித்துச் சென்றுள்ளதாக மலேசியப் பொலீஸார் தெரிவித்துள்ளனர்.

தன்னியக்கத் துப்பாக்கிகள் மற்றும் "ரொக்கெட்லோஞ்சர்கள்" போன்ற நவீன ஆயுதங்களை வைத்திருந்த கடத்தல்காரர்கள் பணயக் கைதிகளை விரைவுப் படகு ஒன்றில் ஏற்றிக் கொண்டு சென்றதாகக் கூறப்படுகிறது.

கடத்தல் காரர்கள் பிலிப்பைன்ஸைச் சேர்ந்தவர்கள் என்று உறுதிப்படுத்தப்படாத தகவல்கள் தெரிவிக்கின்றன.

சமீபத்தில் பிலிப்பைன்ஸ் ராணுவம் அதிரடி நடவடிக்கை மூலம் இஸ்லாமியத் தீவிரவாதிகளிடமிருந்து பணயக்கைதிகளை மீட்டது. இதில் தீவிரவாதிகள் பலர் கொல்லப்பட்டனர்.

இதற்குப் பதிலடியாகவே தீவிரவாதிகள் இந்தக் கடத்தலை மேற்கொண்டிருக்கலாம் எனவும் சந்தேகம் எழுப்பப்பட்டுள்ளது.

(இ-6-ரி)

# அமெரிக்கா கோரிக்கை

வாஷிங்ரன், ஏப்ரல் 25

ஆப்கானிஸ்தானில் நிலவும் பிரச்சினைகளை முடிவுக்குக் கொண்டுவர தலிபான் இயக்கம் மீதான தனது செல்வாக்கை பாகிஸ்தான் பயன்படுத்த வேண்டும் என்று அமெரிக்கா வேண்டுகோள் விடுத்துள்ளது.

மேலும் போரில் ஈடுபட்டுள்ள தீவிரவாதக் குழுக்களிடையே பேச்சுக்களை நடத்தித் தீர்வுகாண ஊக்குவிக்க பாகிஸ்தான் முன்வர வேண்டும் எனவும் அமெரிக்கா கூறியுள்ளது.

(இ-6-ரி-9)

# ஆஸ்திரேலியாவில் புகலிடம்

சிட்னி, ஏப்ரல் 25

சிம்பாப்வேயின் வெள்ளை இன விவசாயிகள் குடிவரவுக் கொள்கைக்கு தகுதியானவர்களாக இருந்தால் அவர்களுக்கு தமது நாட்டில் பாதுகாப்பு வழங்கப்படும் அல்லது அவர்கள் அவுஸ்திரேலியாவில் நிரந்தரமாகத் தங்க அனுமதிக்கப்படுவர் என்று ஆஸ்திரேலிய அரசு அறிவித்துள்ளது.

(இ-6-ரி)

# முதியோரைப் பராமரிக்க வரிச்சலுகை அளிக்க வேண்டும்

## சிங்கப்பூரில் கோரிக்கை

சிங்கப்பூர் சிற்றி, ஏப்ரல் 25

சிங்கப்பூரில் முதியவர்களைப் பராமரிக்கும் பணியாளர்களுக்கு வரிச்சலுகை வழங்க வேண்டும் என்று கோரிக்கை எழுந்துள்ளது.

நாட்டில் முதியவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதால் அவர்களைப் பராமரிக்க பணியாளர்கள் கிடைப்பது அரிதாக உள்ளது.

அதனால் குழந்தைகளைக் கவனிக்கும் பணியாளர்களுக்கு வழங்கப்படும் வரிச்சலுகை போல் முதியவர்களைப் பராமரிக்கும் பணியாளருக்கும் வரிச்சலுகை வழங்கப்பட வேண்டும் என்று கோரிக்கை எழுந்துள்ளது. வரிச்சலுகை அளிக்கப்பட்டால் பணியாளர்கள் முதியவர்களைப் பராமரிக்க முன்வருவார்கள் என நம்பப்படுகிறது.

ஆனால் சிங்கப்பூர் அரசு குழந்தைகளைக் கவனிப்பவர்களுக்கு வழங்கப்படும் அனைத்துச் சலுகைகளும், தாய்மார்கள் அதிக குழந்தைகளைப் பெறுவதை ஊக்குவிக்கவே வழங்கப்படுவதாகத் தெரிவித்து மேற்படி கோரிக்கையை மறுத்து வருகிறது.

இதனால் சிங்கப்பூரில் பல முதியவர்கள் தமது இறுதிக் காலத்தைத் துன்பத்தில் கழிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

# கோபாலசாமியின் உரைக்கு இலங்கை அரசு கண்டனம்

புதுடில்லி, ஏப்ரல் 25

இலங்கைக்கு எதிராகக் கருத்து வெளியிட்டமைக்காக மறுமலர்ச்சி தி.மு.க. பொதுச் செயலாளர் வை. கோபாலசாமி மீது கடும் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று இலங்கை இந்தியாவிடம் கோரியுள்ளது.

புதுடில்லியில் சிகிச்சை பெற்றுவரும் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் இது விடயமாக இந்திய வெளிவிவகார அமைச்சருடன் தொடர்பு கொண்டுள்ளார்.

அண்மையில் ஜெனிவாவில் நடந்த பேரணி ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய வை. கோபாலசாமி இலங்கையில் அரச படைகள் ஈழத்தமிழர்களைக் கொலை செய்வதாகவும்—

அவர்களைக் கைது செய்து சித்திரவதை செய்வதாகவும் குற்றஞ் சாட்டி இருந்தார்.

இந்த மனித உரிமை மீறல்களை ஐ. நா. சபைக்கு எடுத்துச் செல்லப் போவதாகவும் அவர் கூறி இருந்தார். (இ-3)

# கதிர்காமரின் குற்றச்சாட்டுக்கு வை.கோ. மறுப்புத் தெரிவிப்பு

சென்னை, ஏப்ரல் 25

இலங்கை வெளிவிவகாரத் துறை அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் தம் மீது சுமத்திய குற்றச்சாட்டை மறுத்து ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வை.கோ. நேற்று சென்னையில் ஓர் அறிக்கை வெளியிட்டார்.

இலங்கை இனப்பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலம்தான் தீர்வுகாண வேண்டும் என்று ஜெனிவாவில் இடம்பெற்ற பேரணியில் தாம் பேசியதாகவும்—

இலங்கை வெளியுறவுத் துறை அமைச்சர் கூறியது போன்று இலங்கை ஜனாதிபதியின் பெயரைத் தாம் எந்த இடத்திலும் குறிப்பிடவில்லை என்றும்— வைகோ தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

பேரணியில் தாம் பேசியதைத் திரித்துக் கூறித் தம்மைக் களங்கப்படுத்தவும்—

தமது மதிப்பைச் சீர்குலைக்கவும்— முயற்சிக்கும் இலங்கை அரசு அபாண்டமாகப் பழி சுமத்துகிறது என்றும்—

இது குறித்து இந்திய வெளிவிவகார அமைச்சரிடம் தனது கண்டனத்தைத் தெரிவிக்க உள்ளதாகவும்—

வைகோ தனது அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளார்.

(இ-6-ரி)

### பாகிஸ்தான்

# இராணுவ ஆட்சியாளருக்கு எதிராக 19 கட்சிக் கூட்டணி போராட்டம்

பாகிஸ்தானில் இராணுவ ஆட்சியை அகற்றி அங்கு மீண்டும் ஜனநாயக அரசை ஏற்படுத்த நவாஸ் ஷெரீப்புடன் இணைந்து போராடப் போவதாக 19 முக்கிய கட்சிகளைக் கொண்ட பாகிஸ்தான் மக்கள் ஜனநாயகக் கூட்டணி அறிவித்துள்ளது.

ஷெரீப்புடன் இணைந்து போராடுவது குறித்து கூட்டணிக் கட்சிகளுடன் ஆலோசனை நடத்திய பின்னர் பேசிய கூட்டணித் தலைவர் நவாப்ஸாதா நஸ்ருல்லாகான் இதனைத் தெரிவித்தார்.

பாகிஸ்தான் சர்வதேச அரங்கில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளது. இராணுவ ஆட்சியில் பொருளாதார ரீதியாக நாடு பின்தங்கி விட்டது. தேர்ந்தெடுக்கப்பட்ட ஜனநாயக அரசால் தான் இவற்றைச் சமாளிக்க முடியும். ஆகவே நாட்டில் விரைவில் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

இதே சமயம் — தேர்தல் நடத்துவதற்காக குறிப்பிட்ட கால எல்லை எதனையும் இராணுவ அரசு தற்போது அறிவிக்காது என்று ஜெனரல் முஷாரப் கூறியுள்ளார்.

# அணு ஆயுதத் தடை ஒப்பந்தம் குறித்த நான்கு வார மாநாடு

## அமெரிக்காவில் நேற்று ஆரம்பம்

நியூயோர்க், ஏப்ரல் 25

அணு ஆயுதப் பரவல் தடுப்பு ஒப்பந்தம் (என்.பி.டி) குறித்த நான்கு வார மாநாடு ஒன்று அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் நேற்றுத் திங்கட்கிழமை ஆரம்பமானது.

சுமார் 180 நாடுகள் பங்கு பற்றும் இந்த மாநாட்டில் இதுவரை அணு ஆயுதங்களைத் தயாரிக்காத நாடுகள், எத்தகைய நிபந்தனையுமின்றி அணு ஆயுதங்களை உலகில் இருந்து ஒழிக்க உறுதி அளிக்குமாறு அமெரிக்கா, ரஷ்யா, பிரிட்டன், பிரான்ஸ் மற்றும் சீனா ஆகிய ஐந்து அணு ஆயுத வல்லரசுகளையும் கேட்டுக்கொள்ளும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அணு ஆயுத பரவல் தடுப்பு ஒப்பந்தம் கைச்சாத்தாகி 30 ஆண்டுகள் ஆகியும் அணு ஆயுதம் இல்லாத உலகை உருவாக்க அணு ஆயுத வல்லரசுகள் எந்த வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்ற கருத்து வலுப்பெற்றிருப்பதால் மேற்படி ஐந்து நாடுகளும் இந்த மாநாட்டில் பலத்த விமர்சனங்களை எதிர் கொள்ள நேரிடும் என்று கூறப்படுகிறது. (இ-6-ரி)

# செய்தி ஊடகங்கள் மீது ஈரானில் கடும் கட்டுப்பாடு

தெஹ்ரான், ஏப்ரல் 25

ஈரானில் இஸ்லாமிய கலாசாரத்தை மீறி செய்தி மற்றும் கட்டுரைகள் வெளியிடும் பத்திரிகைகள் மற்றும் வார, மாத இதழ்கள் மீது கடும் கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது.

சீர்திருத்தவாதிகளின் செல்வாக்கு அதிகரித்து வருவதாக ஈரான் இஸ்லாமிய அடிப்படைவாத மதத்தலைவர்கள் நம்புவதே மேற்படி கட்டுப்பாட்டிற்குக் காரணம் எனக் கூறப்படுகிறது.

இதற்கிடையில் சீர்திருத்தக் கருத்துக்களுக்கு ஆதரவாக செய்தி வெளியிட்ட பத்திரிகை ஆசிரியர்கள் சிலர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் பழமைவாத இஸ்லாமிய கருத்துக்களை விமர்சிக்கும் செய்தி ஊடகங்கள் மீது கடும் கட்டுப்பாடுகள் மேற்கொள்ளப்படுவதாகவும் அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சமீபத்தில் இஸ்லாமிய மரபுக்கு எதிராக உடையணிந்த இளம் பெண் ஒருவரை வீதியில் மதப்பாதுகாப்புப் படை தடுத்து நிறுத்தியதற்கு எதிர்ப்புத் தெரிவித்து மாணவர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தியதே, மதவாதிகளின் மேற்படி கடும் போக்குக்குக் காரணம் எனக் கருதப்படுகிறது.

(இ-6-ரி)

# கோரிக்கை

புதுடில்லி, ஏப்ரல் 25

டில்லி மாநில முதல்வர் ஷீலா தீட்சித் பதவி விலக வேண்டும் என்று அவரது காங்கிரஸ் கட்சி சட்டமன்ற உறுப்பினர்கள் 19 பேர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

ஷீலா தீட்சித் நிர்வாகத் திறமை அற்றவர், ஊழல் செய்பவர் என்றும் அவர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

(இ-6-ரி)

# மக்கள் இடம்பெயர்வை அடுத்து
# பளை ஆஸ்பத்திரி செயல் இழப்பு
## வைத்திய அதிகாரியும் வெளியேறினார்

தென்மராட்சி, ஏப்ரல் 25
பளை மற்றும் அயல்கிராமங்களில் இருந்து மக்கள் முழுமையாக இடம்பெயர்ந்ததையடுத்து பளை ஆஸ்பத்திரியும் செயலிழந்தது.

ஆஸ்பத்திரி ஊழியர்கள், அங்கு தங்கியிருந்த நோயாளர்கள் அனைவரும் அங்கிருந்து கடந்த வாரமே வெளியேறிய போதும் —

அந்த வைத்தியசாலையின் பொறுப்பதிகாரியான டாக்டர் எஸ். அம்பிகைபாகன் மட்டும் அங்கு தங்கியிருந்து அங்கிருந்த சிறு எண்ணிக்கையான மக்களுக்கு சிகிச்சை அளித்து வந்தார்.

தற்சமயம் முழுமையாக மக்கள் அங்கிருந்து வெளியேறியதை அடுத்து டாக்டர் அம்பிகைபாகனும் கடந்த சனியன்று அங்கிருந்து வெளியேறி தென்மராட்சிக்கு வந்துள்ளார்.

வைத்தியசாலையின் அம்புலன்ஸ் மற்றும் வைத்திய உபகரணங்கள் அனைத்தையும் அங்கே விட்டு விட்டு அவர் வந்துள்ளதாகக் கூறப்பட்டது.

வைத்தியசாலை உள்ளிட்ட நகரப் பகுதி, மக்கள் நடமாட்டமின்றி வெறிச்சோடிக் காணப்பட்டதாக அங்கிருந்து கடைசியாக வந்தவர்கள் தெரிவித்தனர்.

(இ-3-117)

# கல்விக்கல்லூரிக்கு தெரிவானோர் பதிவு மேற்கொள்ள முடியாத நிலை
## போக்குவரத்து வசதி இன்மையால்

குடாநாட்டுக்கும் வெளி இடங்களுக்குமான ஆகாய மற்றும் கடல் வழி போக்குவரத்து மார்க்கங்கள் அனைத்தும் அண்மையில் முற்றாகத் தடைப்பட்டதைத் தொடர்ந்து வவுனியா மற்றும் மட்டக்களப்புக் கல்விக் கல்லூரிகளுக்குத் தெரிவு செய்யப்பட்ட யாழ்ப்பாண மாணவர்கள் அங்கு சென்று தமது பதிவுகளை மேற்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளது

எதிர்வரும் மே 2 ஆம் திகதி மேற்படி கல்விக் கல்லூரிகளுக்குத் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கான விரிவுரைகள் ஆரம்பமாகவுள்ளன.

தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள் அதற்கு முன்னதாக தமது பதிவுகளை அங்கு மேற்கொள்ள வேண்டும் என்றும்—

குறித்த திகதிக்குள் பதிவுகளை மேற்கொள்ளத் தவறுவோரின் இடத்துக்குப் புதிய மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்பட உள்ளதாகவும்—

வவுனியா கல்விக் கல்லூரி பீடாதிபதி த. அழகரட்ணத்தால் மேற்படி மாணவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்ட கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. [இ-9]

## விண்ணப்பம் கோரல்

வலி. தென்மேற்கு ஏப்ரல் 25
யாழ் — திறந்த பல்கலைக் கழக பகுதிநேர எந்திரவியல் விரிவுரையாளருக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

எந்திரவியல் பட்டம் பெற்றவர்கள் எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் ச. ஆ. ஞானேந்திரன், இலங்கை திறந்த பல்கலைக்கழகம், கொக்குவில் பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

(இ-185)

## குருபூசை

திருநெல்வேலி, ஏப்ரல் 25
வண்ணை — சாந்தையர் மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலயத்தில் திருநாவுக்கரசு நாயனார் குருபூசை எதிர்வரும் 29 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

திருமுறை ஓதுதல், விசேட பூசை. விரிவுரைகள் ஆகிய பல்வேறு நிகழ்வுகள் இதில் இடம் பெறவுள்ளன.

(இ-135)

# மரண அறிவித்தல்கள்

## இராமலிங்கம் சபாநாதன் (செல்வம்)

(கரம்பன், தெற்கு)

கரம்பன் தெற்கு ஒழுவில் வைரவ கோயிலடியைப் பிறப்பிடமாகவும் 20 செட்டித்தெரு, நீர்கொழும்பை வதிவிடமாகவும் கொண்ட இராமலிங்கம் சபாநாதன் (செல்வம்) அவர்கள் 23 - 04 - 2000 ஞாயிற்றுக் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற இராமலிங்கம் ஜானகி தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வரும் தங்கேஸ்வரியின் அன்புக் கணவரும் அஜந்தா, பவிதரன், பவித்திரா, விஜிதரன் ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற திருமதி சண்முகலிங்கம், துரையன், தேவா, யோகன், நாதன் ஆகியோரின் அன்புச் சகோதரரும் இராஜேஸ்வரி, யோகேஸ்வரி, புவனேஸ்வரி, கமலேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நீர்கொழும்பில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:-
ச. கைலாசபிள்ளை (நவம்)
செல்லத்துரை, நகுலேஸ்வரி
(உடன் பிறவாச் சகோதரர்கள்)

இல. 4. அன்னசத்திர ஒழுங்கை,
யாழ்ப்பாணம். (75738)

## திருமதி நவரத்தினம்-கோகிலராணி

சங்கத்தானை, பொற் தொழிலாளர் வீதியைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட திருமதி நவரத்தினம் கோகிலராணி 24-04-2000 ஞாயிற்றுக் கிழமை காலமானார். அன்னார். காலஞ்சென்ற நவரத்தினத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற செல்லையா சபாரத்தினம் – நாகேஸ்வரி தம்பதிகளின் அன்பு மகளும், கஜேந்திரன் (வீடியோ -போக்கஸ்), பிறேமகலா, (பல்கலைக்கழகம், விரிவுரையாளர், மட்டுநகர்), நிர்மலா (இசைக் கல்லூரி, மருதனார்மடம்) ஆகியோரின் அன்புத் தாயாரும், குணபாலன் (பல்கலைக்கழகம் – விரிவுரையாளர், மட்டுநகர்), சாந்தினி ஆகியோரின் அன்பு மாமியாரும் சாருஜனின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பொற் தொழிலாளர் வீதி, சங்கத்தானை, சாவகச்சேரியில் நடைபெற்று இன்று (25-04 2000) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2-00 மணியளவில் பூதவுடல் கண்ணாடிப்பிட்டி மயானத்துக்கு தகனக் கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
கஜேந்திரன் (மகன்)
(கண்ணன்)
வீடியோ போக்கஸ்
சாவகச்சேரி.

பொற் தொழிலாளர் வீதி,
சங்கத்தானை,
சாவகச்சேரி. (75734)

# யாழ். ஆஸ்பத்திரி வீதி, கந்தர்மடம் பகுதிகளில் இருவர் கைதாகினர்

யாழ்ப்பாணம் ஏப்ரல் 25
யாழ் ஆஸ்பத்திரி வீதி மற்றும் கந்தர்மடப் பகுதிகளைச் சேர்ந்த இரு இளைஞர்கள் கடந்த 22ஆம் திகதி படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று உறவினர்களினால் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு தெரிவிக்கப்பட்டுள்ளது.

பத்மநாதன் கார்த்திக் (கந்தர்மடம் குமாரசாமி வீதி, வயது 21). தேவதாஸ் சந்திரகுமார் (ஆஸ்பத்திரி வீதி, வயது 29) ஆகியோரே கைது செய்யப்பட்டவர்களாவர்.

512 ஆவது படைப்பிரிவில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் இவர்களது கைது தொடர்பான பற்றுச்சீட்டுக்கள் படையினரால் உறவினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. (இ-9)

## வேலை பூர்த்தி

சண்டிலிப்பாய், ஏப்ரல் 25
சுழிபுரம் காட்டுப்புலம் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையில் ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனத்தின் அனுசரணையுடன் நிறுவப்பட்டு வரும் மலசலகூடத்தின் கட்டட வேலைகள் பூர்த்தியடைந்துள்ளன.

(இ-135)

# ஈ.பி.டி.பி.யிலிருந்து விலகியவர் நேற்று நீதிமன்றத்தில் ஆஜர்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 25
ஈ. பி. டி. பி. அமைப்பில் இருந்து விலகி யாழ். மனித உரிமைகள் ஆணைக்குழு அலுவலகத்தில் சரணடைந்ததாகக் கூறப்படும் உறுப்பினர் ஒருவர் ஆணைக்குழு அதிகாரி என். ஜீவேஸ்வராவினால் நேற்று யாழ். நீதிமன்றில் ஒப்படைக்கப்பட்டார்.

பஞ்சலிங்கம் சுதன் (வயது 21) என்பவரே ஈ. பி. டி. பி. கட்சியில் இருந்து விலகி ஆணைக்குழுவில் சரணடைந்தவர் என்று தெரிவிக்கப்பட்டது.

கந்தர்மடம், பழம் வீதியைச் சேர்ந்த மேற்படி இளைஞன் கடந்தகால இடம்பெயர்வுடன் குடும்பத்தாருடன் வவுனியா சென்றிருந்தார்.

மீண்டும் 4 மாதங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணம் வருவதற்காக வவுனியாவில் உள்ள ஈ. பி. டி. பி. அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு அவர்களின் உதவியைக் கோரியதாகவும் —

தனக்கு உதவி செய்வதாகக் கூறி விமானம் மூலம் இங்கு அழைத்து வந்து தீவகத்தில் வைத்து பயிற்சி வழங்கப்பட்டு பின்னர் நெல்லியடியில் உள்ள ஈ. பி. டி. பி. அலுவலகத்தில் தாம் கடமையில் அமர்த்தப்பட்டதாகவும் —

அங்கிருந்து 3 நாள்களுக்கு முன்னர் விலகி நேற்று யாழ். மனித உரிமை ஆணைக்குழு அலுவலகத்தில் சரணடைந்ததாகவும்— அந்த இளைஞன் நீதிவான் இ.த விக்னராஜா முன்னிலையில் தெரிவித்தார்.

விசாரணைகளை மேற்கொண்ட நீதிவான், இவரை வவுனியாவில் உள்ள இவரது தந்தையான முத்து பசுபதி என்பவரிடம் அனுப்பி வைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும்—

வவுனியாவுக்கான போக்குவரத்து வசதிகள் ஆரம்பமாகும் வரை இவரை யாழ். சிறையில் காவலில் வைக்குமாறும்— சிறைச்சாலை அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

## விதவைகளுக்கு உதவி

யாழ். மனித முன்னேற்ற நடுநிலையம் பதினாறு விதவைப் பெண்களுக்கு அண்மையில் 5 ஆயிரம் ரூபா வீதம் வழங்கியுள்ளது. (இ-30)

# இடம்பெயர்ந்தோரை உடனடியாக பதிவுகளைமேற்கொள்ள அறிவுறுத்து

யாழ்ப்பாணம், ஏப்ரல் 25
பளை மற்றும் மருதங்கேணி பிரதேச செயலர் பிரிவுகளில் இருந்து இடம்பெயர்ந்துகுடாநாட்டின் ஏனைய பகுதிகளில் தங்கியிருக்கும் மக்கள் தாம் தற்போது தங்கியுள்ள பிரதேச செயலர் பிரிவுகளில் தமது பதிவுகளை மேற்கொள்ளுமாறு யாழ். செயலகம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

தற்போது தங்கியுள்ள பிரிவின் கிராம சேவகர்களிடம் சென்று அவர்கள் தமது பதிவுகளை மேற்கொள்ள முடியும் என்றும்—

அவ்வாறு பதிவினை மேற்கொள்ளும் பட்சத்தில் அவர்களுக்கான நிவாரணம் மற்றும் உதவிகளை இலகுவாக வழங்க முடியும் என்றும்— தெரிவிக்கப்பட்டது.

மே மாதத்துக்கான நிவாரணப் பொருள்களை வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டு வருவதால் இடம் பெயர்ந்த மக்கள் தாமதம்செய்யாது பதிவுகளை மேற்கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

(இ-9)

## 112ஆவது அகவை பூர்த்தி

கொழும்புத்துறை, ஏப் 25
யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபை இம்மாதம் 112 ஆவது அகவையைப் பூர்த்தி செய்கிறது.

இச்சபை சர்வதாரி வருடம் சித்திரைத்திங்கள் பதினோராம் நாள் (29—04—1888) ஞாயிற்றுக்கிழமை நாவலர் சைவப்பிரகாச வித்தியாசாலையில் ''யாழ்ப்பாணம் சைவசமய பரிபாலன சபை'' என்ற பெயருடன் ஆரம்பிக்கப்பட்டு பின்னர் விகிர்தி வருடம் கார்த்திகைத் திங்கள் முதலாம் நாள்(15-11-1890) ''யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபை'' எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

இச்சபையின் தோற்றமும் வளர்ச்சியும் குறிக்கோளும் நோக்கங்களும் ஆற்றிய பணிகள் பற்றிய முழுமையான விவரங்கள் ஆகியவற்றை உள்ளடக்கிய தொடர் கட்டுரை ஒன்று அடுத்த மேமாத 'இந்து சாதனம்' இதழில் வெளிவர உள்ளது. [இ-30]

# இந்திய மீனவர்கள் ஐவரையும் யாழ். சிறைக்கு மாற்ற உத்தரவு

பிணையில் செல்ல வசதிகள் இன்றி நீண்டகாலமாக அனுராதபுரம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் 5 இந்திய மீனவர்களையும் யாழ். சிறைச்சாலைக்கு மாற்றம் செய்யுமாறு யாழ். நீதிமன்றம் அனுராதபுரம் சிறை அத்தியட்சகருக்குக் கட்டளை அனுப்பியுள்ளது.

பாலசிங்கம் கார்மேகம், கறுப்பையா நவநீதன் இராஜேந்திரன், முனியாண்டி கோவிந்தன், பணியடிமை நவசேகர், தங்கவேல் இராஜேந்திரன் ஆகிய 5 இந்திய மீனவர்களுமே பிணைப் பணம் செலுத்தமுடியாத நிலையில் தொடர்ந்து அனுராதபுரத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இரணைதீவு கடற்பரப்பில் 1998 ஆம் ஆண்டு ஜூலை மாதம் விடுதலைப் புலிகளுக்குப் பொருள்களைக் கடத்தி வந்தார்கள் என்ற சந்தேகத்தின் பேரில் படையினரால் கைது செய்யப்பட்ட இவர்கள் தலா 20 ஆயிரம் ரூபா பிணையில் செல்ல அனுராதபுரம் நீதிமன்றம் உத்தரவு வழங்கியிருந்தது.

எனினும் பிணைப் பணம் செலுத்த வசதிகள் அற்ற நிலையில் இவர்கள் தொடர்ந்தும் அங்கு தடுத்து வைக்கப்பட்டிருந்தனர்.

அண்மையில் மேற்படி 5 மீனவர்களினதும் வழக்குகள் அனுராதபுரத்தில் இருந்து யாழ். நீதிமன்றத்துக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளன. அதனைத் தொடர்ந்து யாழ். நீதிமன்றம் 5 பேரையும் யாழ். சிறைக்கு மாற்றுமாறு அனுராதபுரம் சிறைச்சாலை அத்தியட்சகருக்கு கட்டளை அனுப்பி உள்ளது. [இ-9]

## 'குமண' வருகிறது

குடாநாட்டுக்கான அத்தியாவசிய உணவுப் பொருள்களை ஏற்றிக்கொண்டு 'குமண' கப்பல் சில தினங்களில் கொழும்பில் இருந்து யாழ்ப்பாணத்துக்குப் புறப்படத் தயாராக இருப்பதாக யாழ். செயலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்,

இதில் நிவாரணத்துக்கான அரிசி, சீனி, பருப்பு போன்ற உணவுப் பொருள்கள் எடுத்து வரப்படுவதாக தெரிவிக்கப்பட்டது. (இ-9)

# வெளிமாவட்டங்களுக்குச் செல்ல பயண அனுமதி வழங்கப்பட்டோர்

யாழ்.குடாநாட்டிலிருந்து வெளிமாவட்டங்களுக்குப் பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டவர்களின் பதிவு இலக்கங்கள் உதயனில் வெளியாகி வருவது தெரிந்ததே.

பயண அனுமதி வழங்கப்பட்டவர்களின் (இம் மாதம் 23 ஆம் 24 ஆம் திகதி வரை) பதிவு இலக்கங்கள் பிரதேச செயலக ரீதியாக வருமாறு:-

இம்மாதம் 23 ஆம் திகதி வரை அனுமதி வழங்கப்பட்டோர் விவரம்.

### சங்கானை

(141697ஏ), (141762ஏ), (141762பி), (141763ஏ), (141911ஏ), (141941ஏ).

### சாவகச்சேரி

(137830ஏ), (138641ஏ), (138644ஏ), (138644பி), (138644சி), (138646ஏ), (138661ஏ), (138661பி), (138661சி), (138661டி), (138664ஏ), (138664பி), (138664சி), (138664டி), (138675ஏ), (141445ஏ), (141445பி), (141445சி), (141445டி), (141465ஏ), (141488ஏ), (141488பி), (141549ஏ), (141549பி), (141574ஏ), (141574பி), (141574சி), (141588ஏ), (141590ஏ), (141590பி), (141591ஏ), (141591பி), (141600ஏ), (141600பி), (141617ஏ), 141630ஏ), (141630பி), (141687ஏ), (141687பி), (146501ஏ), (130521ஏ), (130521பி), (130521சி), (131523ஏ), (131523பி), (134935ஏ), (135453ஏ), (139189ஏ), (139192ஏ). (139192 பி), (139662 ஏ), (139662 பி), (139938 ஏ), (139938 பி), (139949 ஏ), (139961 ஏ), (139961 பி), (139978 ஏ), (139978 பி), (141079 ஏ), (141079 பி), (141079 சி), (141079 டி), (141659 ஏ), (141659 பி), (141659 சி), (141659 டி), (141662 ஏ), (141662 பி),

### யாழ்ப்பாணம்

(130374 ஏ), (130374 பி), (137256 ஏ), (140599 ஏ), (140599 பி), (140667 ஏ), (140781 ஏ), (140793 ஏ), (142778 ஏ), (142778 பி), (142797 ஏ), (142804 ஏ), (142809 ஏ), (142809 பி), (142809 சி), (142809 டி), (141833 ஏ).

(14288?ஏ), (142881பி), (142881சி), (142904ஏ), (142904பி), (142904சி), (142904டி), (142912ஏ), (142940ஏ), (142955ஏ), (142955பி), (143007ஏ), (143008ஏ), (143010ஏ), (143010பி), (143107ஏ), (143111ஏ), (143113ஏ),

### கோப்பாய்

(124047ஏ), (124047பி), (124047சி), (134078ஏ), (136530ஏ), (136567ஏ), (136585ஏ), (136588ஏ), (136588பி), (136589ஏ), (136591ஏ), (136600ஏ), (136600பி), (136608ஏ), (136608பி), (136610ஏ), (136651ஏ, (136659ஏ), (136659பி),

(143267 ஏ), (143267பி), (143288 ஏ), (143292 ஏ), (143292 பி), (143292 சி), (143292 டி), (143292 ஈ), (143410 ஏ), (143411 ஏ), (143423 ஏ), (143423 பி), (143424 ஏ), (143424 பி), (143424 சி), (143428 ஏ), (143429 ஏ), (143429 பி), (143429 சி), (143430 ஏ), (143431 ஏ), (143433 ஏ), (143435 ஏ), (143435 பி), (143436 ஏ)

### நல்லூர்

(133279 ஏ),(136801 ஏ), (136802 ஏ), (136804 ஏ), (136877 ஏ), (136878 ஏ), (136878 பி), (136878 சி), (136879 ஏ), (139879 ஏ)' (139879 பி), (142164 ஏ), (142164பி), (142167ஏ),

### சண்டிலிப்பாய்

(139575ஏ), (139707ஏ), (139707பி), (141287ஏ), (141354ஏ). (141358ஏ), (141750ஏ), (141872ஏ), (141872பி), (141903ஏ), (141903பி), (141904ஏ), (141946ஏ), (142145ஏ).

### உடுவில்

(136567பி), (136567சி), (136573ஏ), (143262ஏ), (143262பி), (143264ஏ) (143264பி), (143265ஏ), (138235ஏ), (138235பி), (141209ஏ), (141209பி), (141242ஏ), (141278ஏ), (141689ஏ), (141925ஏ), (141985ஏ)

### தெல்லிப்பழை

(138233ஏ), (138233பி), (141231ஏ).

இம் மாதம் 24 ஆம் திகதி வரை அனுமதி பெற்றோர்.

### சங்கானை

(131830ஏ), (135495 ஏ), (135554 ஏ), (135554 பி), (135790 ஏ), (135790 பி), (141214 ஏ), (141218 ஏ), (141714 ஏ), (141714 பி), (141738 ஏ), (141739 ஏ), (141745 ஏ), (141745 பி), (141910 ஏ), (141910 பி), (141980 ஏ), (141980 பி), (142014 ஏ),

### யாழ்ப்பாணம்

(130456 ஏ), (132124ஏ), (132124 பி), (132181 ஏ), (132181 பி), (140517 ஏ), (140517 பி), (140518 ஏ), (140518 பி), (142776 ஏ), (142858 ஏ), (142901 ஏ), (142907ஏ,) (142919 ஏ), (142919 பி), (142919 சி), (142921 ஏ), (142921 பி), (142936 ஏ), (142936 பி), (142938ஏ), (142938பி), (142938சி), (142938டி), (142938ஈ), (142967ஏ), (142967பி), (142990ஏ), (142990பி), (124990சி), (143027ஏ), (143033ஏ),

### கோப்பாய்

(136583ஏ), (136586ஏ) (136586பி), (136586சி)

### நல்லூர்

(141320ஏ), (141744ஏ),

### சண்டிலிப்பாய்

(129355ஏ), (129355பி), (131637ஏ), (134550ஏ), (134550பி), (138258ஏ), (138258பி), (141247ஏ), (141728ஏ), (141728பி), (141768ஏ), (141768பி).

### தெல்லிப்பழை

(141702ஏ), (141702பி), (141702சி), (141787ஏ), (141787பி), (141949ஏ), (141949பி)

### உடுவில்

(127251ஏ), (141604ஏ), (142(??ஏ), (142007பி),

# வலி.மேற்கில் 19 குடும்பங்களுக்கு வீடுகளைத் திருத்த கொடுப்பனவு

வலிகாமம் மேற்கு, ஏப்ரல் 25

வலிகாமம் மேற்குப்பிரதேச செயலர் பிரிவில் மாத வருமானம் ரூபா 1,500க்கு மேல் பெறும் 19 குடும்பங்களுக்கு அண்மைக்கால சம்பவங்களினால் சேதமடைந்த வீடுகளைத் திருத்துவதற்கு நஷ்டஈட்டுக் கொடுப்பனவாக மொத்தம் 12 லட்சத்து 50 ஆயிரத்து 620 ரூபா வழங்கப்பட்டுள்ளது.

வடக்கின் மீள்குடியேற்ற புனரமைப்பு அதிகாரசபை இதற்கான நிதியை யாழ். மாவட்ட செயலக புனர்வாழ்வுக் கிளையினூடாக பிரதேச செயலகத்துக்கு அனுப்பி வைத்துள்ளது.

19 பேருக்குமான காசோலைகள் சம்பந்தப்பட்ட வங்கிகளுக்கு பிரதேச செயலகத்தினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன (இ-175)

## கந்தரநுபூதி மனனப் போட்டி

சுழிபுரம், ஏப்ரல் 25

நிலையக்குரல் ஆதரவுடன் வருடா வருடம் நடைபெற்று வரும் கந்தரநுபூதி மனனப் போட்டியும் கட்டுரைப் போட்டியும் மே மாதம் நடுப்பகுதியில் இடம் பெறவுள்ளன.

இந்தப் போட்டியில் வெற்றி பெறுவோருக்கான பரிசுகள், பறாளை சிவசுப்பிரமணிய சுவாமி கோயில் சங்காபிஷேகத் தினத்தன்று வழங்கப்படவுள்ளன.

சுழிபுரம் பகுதியிலுள்ள பாடசாலை மாணவர்களுக்கிடையே கட்டுரைப் போட்டி ஒன்று கந்தரநுபூதி எனும் தலைப்பில் நடைபெறவுள்ளது. இதற்கான ஏற்பாடுகளை பஜனைச் சபையினர் மேற்கொண்டு வருகின்றனர். (இ-28)

## மேதினக் கூட்டம்

வலி.வடக்கு, ஏப்ரல் 25

வட பிராந்திய தொழிற் சங்கங்களின் கூட்டமைப்பில் இணைந்துள்ள தொழிற் சங்கங்களும் ஏனைய தொழிற் சங்கங்களும் இணைந்து நடத்தும் மேதினக் கொண்டாட்டம் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் இ. தவராசா தலைமையில் எதிர்வரும் திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது. (இ-85)

## பொதுமக்கள் அதிருப்தி

யாழ். மாவட்ட பிரதேச செயலர் பிரிவுகளில் நடமாடும் பிரதேச செயலக சேவை இடம்பெற்று வருகின்ற போதிலும் பொது மக்களுக்குத் தேவையான அத்தியாவசிய விண்ணப்பப் படிவங்களைப் பெற முடியாத நிலை இருந்து வருவதாகக் கூறப்படுகிறது.

குறிப்பாக கடவுச் சீட்டுக்கான விண்ணப்பப்படிவங்கள் இந்தச் சேவையின் போது வழங்கப்படுவதில்லை என்று தெரிவிக்கப்படுகிறது. (இ-86)

# சமுர்த்தி முகாமையாளர் நியமனம்; 14 பேருக்கு விரைவில் கிடைக்கும்

வலி.தென்மேற்கு, ஏப்ரல் 25

யாழ். மாவட்டத்தில் விரைவில் 14 பேருக்கு சமுர்த்தி முகாமையாளர் நியமனம் வழங்கப்படவுள்ளது.

இதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் யாழ். மாவட்ட அரசாங்கஅதிபர் க. சண்முகநாதன் மேற்கொண்டுள்ளார்.

கடந்த 8ஆம் திகதி யாழ். செயலகத்தில் பட்டதாரி சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் 8 பேருக்கும், வேலையற்ற பட்டதாரிகள் 6 பேருக்குமாக 14 பேருக்கு நேர்முகப் பரீட்சை நடைபெற்றது.

இதேவேளை — நேர்முகப் பரீட்சைக்கு சமுகமளித்த அனைத்துப் பட்டதாரிகளுக்கும் சமுர்த்தி முகாமையாளர் நியமனம் வழங்க சமுர்த்தி, இளைஞர், விளையாட்டு விவகார அமைச்சர் நடவடிக்கை எடுத்துள்ளார்.

## வாசகர் திருமுகம்

# நாணயமில்லாத நாணயங்கள்

09—04—2000 அன்று திருநெல்வேலிச் சந்தைக்கு சென்றபொழுது எனது துவிச்சக்கரவண்டியை ஆடிய பாதம் வீதியிலுள்ள பாதுகாப்பு நிலையத்தில் வைத்து விட்டு எனது சந்தை அலுவல்கள் முடிந்த பின் துவிச்சக்கரவண்டியினை வெளியே கொண்டு வருவதற்காக வாயிலில் கடமையிலிருந்த இளைஞரிடம் பற்றுச்சிட்டையும் நான்கு இருபத்தைந்து சத நாணயங்களையும் கொடுத்தேன்.

அவர் — ''ஐயா, இந்தக் காசு எங்களுக்கு வேண்டாம். வேறு காசு தாருங்கோ'' என்றார்.

''ஏன் தம்பி? இந்தக் காசுக்கு என்ன குறை? ஏதாயினும் மாசு மறுவுண்டா? மிகமிக நல்ல நிலையிலுள்ள இந்தக் காசை ஏன் வாங்க மறுக்கிறீர்கள்? ''என வினவினேன்.

''இந்தக் காசு செல்லாது ஒருவரும் வாங்க மாட்டினம் நீங்கள் நேரத்தை மினக்கெடுத்தாமல் வேறு காசு தாருங்கோ'' என்றார்.

நான் என்னிடமிருந்த 10 ரூபாவினைக் கொடுத்த போது அதை மாற்ற அவரிடம் சில்லறை இருக்கவில்லை. என்னிடமோ வேறு சில்லறை இருக்கவில்லை. இந்நிலையில் அங்கு வந்த இன்னொரு பொது மகன் ''ஐயா அந்தக் காசை இஞ்சை தாருங்கோ'' என வாங்கி ஒரு ரூபா நாணயமொன்றைத் தந்தார். எனது கஷ்டம் அவ்விடத்தில் நீங்கியது. ஆயினும் மனதில் ஒரு வேதனை. சரியான விளக்கமற்ற அல்லது பொறுப்புணர்வற்ற இத்தகையவர்கள் கடமையில் இருப்பதால் எத்தனை பேர் இடர்ப்பட வேண்டியுள்ளது.

திருநெல்வேலி பிரதேச சபைத் தலைவர் இதனைக் கவனத்தில் கொண்டு வேண்டிய அறிவுறுத்தல்களைக் குத்தகைக்காரர்களுக்கு வழங்க வேண்டுமென விரும்புகிறேன்.

க. சிவராசா

# ஆங்கில ஆசிரியர் நியமனம்

தமிழ்மொழிமூல ஆசிரியர்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்கான நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டோர் விவரம் இங்கு 'உதயன்' பத்திரிகை மூலம் வெளியாகியது. இவ்வேளையில் வடக்கு—கிழக்கு மாகாணங்களில் தகுதிவாய்ந்த ஆங்கில ஆசிரியர்கள் இல்லாமையால் மாணவர்கள் ஆங்கிலத்தில் முன்னேற்றம் காணமுடியாமல் திண்டாடுகிறார்கள். மேலும் 04-04-2000 இல் வெளியான 'உதயன்' செய்திப்படி தொண்டர் ஆசிரிய நியமனத்தில் 43 தொண்டருக்கு ஆங்கில ஆசிரிய நியமனம் வழங்கப்பட்டது. இவர்கள் தங்களது நியமனக் கடிதத்தைப் பெறும்போது தங்களால் ஆங்கிலம் கற்பிக்க முடியாது என்று கூறினார்கள். ஆனால் வலயக் கல்வி அதிகாரி மறு பேச்சின்றி இக்கடிதத்தைக் கொண்டு உங்களது பாடசாலைக்குச் செல்லுங்கள் என்றும் அங்கு சென்று உங்கள் அதிபர்களுடன் கதைத்துப் படிப்பிக்குப்படியும் கூறினார். இப்படியான தகுதியற்ற நியமனத்தைக் கல்வித் திணைக்கள அதிகாரி வழங்கியதால் ஆங்கிலம் கற்கும் மாணவர்களின் எதிர்காலம் முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

இவ்வேளையில் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டோரில் பெரும் பகுதியினர் பல்கலைக்கழக மாணவர்கள். இவர்கள் ஜி. சி. ஈ. (சா/த) ஆங்கிலத்தில் திறமைச் சித்தி அல்லது அதி திறமைச் சித்தி பெற்றவர்கள். ஆனால் கலை, வர்த்தகத்துறை, விஞ்ஞானம், கணிதம் ஆகிய துறைகளில் தமது உயர்தரக் கல்வியைத் தமிழ்மொழிமூலம் கற்பதற்குப் பல்கலைக்கழகம் சென்றனர். இவர்களின் கல்வித்துறைக்கும் ஆங்கில ஆசிரியத் துறைக்கும் தொடர்பேதும் இல்லை.

ஆனால் பல்கலைக்கழக அனுமதி கிடைக்காமல் [170—180] புள்ளிகளைப் பெற்ற மாணவர்கள் ஆங்கில மொழி, ஆங்கில இலக்கியம் இரண்டையும் தமது உயர்கல்வியில், பிரதான பாடமாகக் கற்றுக்கொண்டிருக்கிறார்கள். சிலர் இவ்வுயர் கல்வியில் தேர்ச்சியும் அடைந்தவர்கள் இவ் விடயத்தை இவர்களின் விண்ணப்பப்படிவத்தில் இதற்குரிய மேலதிகாரிகள் பார்வையிடலாம்.

நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டவர்களிலும் பார்க்கக் கூடிய ஆங்கில தராதரத்தை உடையவர்களுக்கு நேர்முகப்பரீட்சைக்கு அழைப்பு வரவில்லை. இக் குளறுபடிச் செயலைச் செய்த கல்வி அதிகாரிகளை இனம் கண்டு எங்கள் மாணவர்களின் எதிர்காலத்தைக் காப்பாற்ற 'உதயன்' ஆவன செய்யவேண்டும். ஆங்கிலத்தில் சிறந்த தரத்துடன் வெளியே நிற்கும் விண்ணப்பதாரிகளின் விண்ணப்பங்களை எல்லாம் திணைக்கள மேலதிகாரிகளின் கவனத்திற்குக் கொண்டுவர வேண்டும். அத்துடன் தரமான ஆங்கில ஆசிரியர்களை நியமிக்க வேண்டும். இவையனைத்தையும் கல்விப் பணிப்பாளர் மனதிற்கொள்ள வேண்டும். இதன் மூலம் வருங்காலத் தமிழ் மாணவர்கள் ஆங்கிலத்தில் முன்னேற்றம் அடையட்டும்.

இந்த முறையீட்டை எங்கள் தமிழ் சமுதாயத்தின் ஆங்கில நலன் கருதி உங்கள் பத்திரிகை மூலம் உரிய மேல் அதிகாரிகளின் கவனத்திற்குக் கொண்டுவரத் தாமதமின்றி வெளியிடவும்.

க. சிவபாதம்

ஓய்வுபெற்ற ஆங்கில ஆசிரியர்

அராலி மத்தி.

## வடமராட்சி கிழக்கிலிருந்து

# இடம்பெயர்ந்த மாணவர்களுக்கு வேறு பாடசாலைகளில் அனுமதி

வடமராட்சி, ஏப்ரல் 25

வடமராட்சி கிழக்கிலிருந்து இடம்பெயர்ந்து பருத்தித்துறை, கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் தங்கியுள்ள மாணவர்களுக்கு அவர்கள் இடம்பெயர்ந்து தங்கியுள்ள இடங்களுக்கு அருகில் உள்ள பாடசாலைகளில் அனுமதி வழங்கப்பட உள்ளது.

இதற்கான நடவடிக்கைகளை வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சி. சிவராசா மேற்கொண்டுள்ளார்.

இடம் பெயர்ந்துள்ள மாணவர்கள் தாம் தங்கியுள்ள இடங்களுக்கு அருகிலுள்ள இரு பாடசாலைகளைக் குறிப்பிட்டு விண்ணப்பிக்குமாறு கோரப்பட்டுள்ளது.

அத்துடன் வடமராட்சி கிழக்கில், மருதங்கேணி கல்விக் கோட்டத்தில் கற்பித்த ஆசிரியர்களும் அதிபர்களும் பருத்தித்துறை, கரவெட்டி கல்விக்கோட்டப் பாடசாலைகளில் தற்காலிகமாக கடமை புரியவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

(இ-173)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 23 — 03 — 932

உதிர்வு 08 — 05 — 1999

### திருமதி அன்னப்பிள்ளை இராசேந்திரம்

(சின்னப்பிள்ளை)

திதி: 25-04-2000

அன்பிற்கும் அறிவிற்கும் உரிய பாசமிகு எங்கள் அன்னையே! ஆண்டு ஒன்று மறைந்தாலு உங்கள் அன்பு நினைவலைகள் என்றென்றும் எங்கள் நெஞ்சை விட்டு மாறாது. உங்கள் ஆத்மா சாந்தியடைய ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் வாடும்

**கணவன், கனடாவில் இருக்கும் மருமகன், மகன், பேரப்பிள்ளைகள், லண்டனில் இருக்கும் மகன், மருமகள், பேரப்பிள்ளை, உடுப்பிட்டியில் வசிக்கும் மருமகன், மகள், பேரப்பிள்ளைகள் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள்.**

அ. இராசேந்திரம்,
இமையாணன் வடக்கு,
உடுப்பிட்டி.

(75665)

## 12 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### அமரர் நாகலிங்கம் பாலகிருஷ்ணர்

(பத்தர்)

அன்னையின் மடியில் 09—11—1920

ஆண்டவன் அடியில் 09—05—1988

திதி: 25 — 04 — 2000

"நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து மறைமொழி காட்டி விடும்"

ஐயா! எமது இதயத் தெய்வமே!
உங்களின் இலட்சியங்களை
எங்களது நெஞ்சினிலே சுமந்து
நீங்கள் காட்டிய சத்தியப் பாதையில்
நாங்கள் உறுதியுடன் செல்லுவோம்!
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

**மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

பூநாறி ஒழுங்கை,
கொக்குவில்.
(மணியகாரன் வீதி, நெல்லியடி)

(75571)

# அம்பனில் மினி ராணுவ முகாம்கள்

நெல்லியடி, ஏப்ரல் 25

வடமராட்சி கிழக்கிலுள்ள அம்பன் பகுதியில் இரு மினி இராணுவ முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன என்று அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அம்பன் நாலாம்பனை பிள்ளையார் ஆலயத்துக்கு அருகிலும், அம்பன் உதவி அரசாங்க அதிபர் பணிமனையிலுமே இந்த மினி முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன.

அம்பனில் இயங்கி வந்த மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பணிமனை தற்பொழுது குடத்தனைப் பகுதிக்குத் தற்காலிகமாக இடமாற்றம் செய்யப்பட்டிருக்கிறது

(இ-109)

## சாயி இல்லத் திறப்பு விழா

கல்வியங்காடு ஸ்ரீ சாயி நிரந்தர் இல்லத் திறப்புவிழா எதிர்வரும் 30 ஆம் திகதி காலை பத்து மணிக்கு நடைபெறவிருக்கின்றது.

கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும் இந்த விழாவில் பஜனை, மண்டபம் திறத்தல், பகவானின் படம் திரை நீக்கம் செய்தல், அஸ்டோத்திரம் ஓதல் ஆகிய நிகழ்வுகள் இடம்பெறவிருக்கின்றன.

நிலையத்தலைவர் வ, பரமசிவத்தின் தலைமையில் இடம்பெறும் அருள் உரை நிகழ்வில் நல்லை ஆதீன முதல்வர் சோமசுந்தர பரமாச்சார்ய சுவாமிகள், சாயி நிலையங்களின் மத்திய இணைப்பாளர் செ. சிவஞானம் உட்படப் பலர் ஆன்மீக உரை நிகழ்த்துவர்.

(இ-3)

## சேவை நயப்பு விழா

யாழ்ப்பாணம், ஏப்ரல் 25

சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் படையின் யாழ். மத்திய மாவட்டத்தின் உதவி மாவட்ட ஆணையாளராக க. அருந்தவராசா மூன்று தசாப்தங்கள் தொடர் சேவையாற்றியமைக்காக அவரைக் கௌரவிக்கும் சேவை நயப்பு விழா எதிர் வரும் 30 ஆம் திகதி பிற்பகல் 2-30 மணிக்கு யாழ். இந்துக்கல்லூரி மண்டபத்தில் நடைபெறவிருக்கின்றது.

அந்த அமைப்பின் பெற்றோர் குழுமச்சபையின் ஏற்பாட்டில் இடம்பெறும் இந்த விழாவில் "மணி ஓசை" என்னும் பட்டம் சூட்டி அவர் கௌரவிக்கப்படவிருக்கிறார்.

(இ-3)


உ

அளவெட்டி

## கும்பழாவளைப் பிள்ளையார் கோயில்

# விக்கிரம வருஷ மஹோற்சவம்-2000

மேற்படி ஆலய மஹோற்சவம் [08—05—2000] திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி [19—05—2000] வெள்ளிக்கிழமை பூங்காவனத் திருவிழாவுடன் பூர்த்தியாகும்.

### திருவிழா விஞ்ஞாபனம்

| | | | | |
|---|---|---|---|---|
| கொடியேற்றம் | 08-05-2000 | திங்கள் | காலை 11.00 மணி (ப.நே.) | |
| சப்பறத் திருவிழா | 16-05-2000 | செவ்வாய் | மாலை 4.00 மணி | ” |
| தேர்த் திருவிழா | 17-05-2000 | புதன் | காலை 10.00 மணி | ” |
| தீர்த்தத் திருவிழா | 18-05-2000 | வியாழன் | காலை 9.00 மணி | ” |
| பூங்காவனத் திருவிழா | 19-05-2000 | வெள்ளி | மாலை 3.00 மணி | ” |

விற்பனை நிலையங்கள் (தேநீர், கடலை, ஐஸ்கிறீம், இனிப்பு, மணிக்கடைகள்) பெறவிரும்புவோர் 05—05—2000 - க்கு முன்னர் விண்ணப்பிக்கவும். 07—05—2000 ஆம் திகதி கடைகள் ஒதுக்கீடு செய்யப்படும்.

தர்மகர்த்தாக்கள் சபை.

கும்பழாவளை, அளவெட்டி.

(75719)



## சற்கோட்டை புனித சவேரியார் ஆலய இளைஞர் மன்றம் நடத்திய

# மாபெரும் பொதுஅறிவுப் போட்டியின் முடிவுகள்

முதலாம் பரிசு இல. 00211 அருணானந்தம் பாலமுரளன்
கல்லூரி வீதி, பருத்தித்துறை.

இரண்டாம் பரிசு இல. 00197 சிவபாதசுந்தரம் நிஞ்சன்
தெணியம்மன் வீதி, புலோலி மேற்கு, பருத்தித்துறை.

மூன்றாம் பரிசு இல. 00667 சிவரேகா சின்னத்தம்பி
ஏழுமாவத்தைத் தோட்டம், அல்வாய் தெற்கு, அல்வாய்.

### ஆறுதல் பரிசுகள் விவரம்

இலக்கங்கள்:

00871 00190 00191 00976 00364
00005 00917 00674 00051 00207

குறிப்பு:- அதிர்ஷ்டசாலிகளாகத் தெரிவுசெய்யப்பட்டோர் எதிர் வரும் ஞாயிற்றுக்கிழமை (30—04—2000) அன்று எமது ஆலய மன்றலில் நடைபெறும் பரிசளிப்பு வைபவத்தில் கலந்து கொண்டு, பரிசில்களைப்பெற்றுக்கொள்ளவும்.

புனித சவேரியார் ஆலய மன்றம்
சற்கோட்டை.

விளம்பர அனுசரணை:-

**நிசன் ஸ்ரோர்ஸ்**
சற்கோட்டை,
அல்வாய் மேற்கு, அல்வாய்.

**ஹப்பி ரெயிலறிங்**
நாவலடி,
அல்வாய் வடக்கு, அல்வாய்.

(75720)

உதயன்

## செய்ய வேண்டியது

விளையாட்டைப் போலவே, போரிலும் வெற்றியும் தோல்வியும் சகஜம். ஆனால் விளையாட்டில் கொள்வது போன்று வெற்றியையும்தோல்வியையும் போரில்ஒன்றாகக் கொள்ளமுடியாது இரண்டும் ஒன்றே என்று கருத முடியாது— எடுக்க முடியாது. ஏனெனில் சமரில் ஏற்படும் தோல்வி பல பாதிப்புகளை; மாற்றங்களைக் கொண்டுவரும்; மக்களுக்குத் துன்பங்களைத் தரும்.

ஆனையிறவு நிகழ்வுகள் அரசாங்கத்துக்குப் பல பாதிப்புகளையும் பின்னடைவுகளையும் கொண்டு வந்துள்ளன என்பது மறுக்க முடியாத ஒன்றாகும். இனப்பிரச்சினையையும் அதற்குத்தீர்வு காண்பதையும் அரசு அவற்றுக்குரிய பரிமாணங்களில் பார்க்கத் தவறிவிட்டது என்பதனையே அங்கு நடைபெற்ற நிகழ்வுகள் நிறுவுகின்றன.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டுமென— சமாதானத்தீர்வு காண வேண்டுமென — எண்ணிய போதே போரை நிறுத்த நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும். போரில் நம்பிக்கை வைப்பதனை விடுத்து, அரசியல் ரீதியான சமாதான முயற்சிகளில் அதிக அக்கறையும் கரிசனையும் காட்டியிருக்க வேண்டும்.

ஆனால் அரசு முற்றிலும் மறுவளமாகவே செயற்பட்டு வந்தது. ஜனாதிபதி தமது முந்திய பதவிக் காலத்தில் போருக்குப் புதிய அர்த்தம் கொடுத்து சமாதானத்துக்கான போர் என்று ''விளக்கம்'' கூறியவாறே, இராணுவத் தீர்வைப் பயிற்சி செய்து கொண்டிருந்தார்.

அதனை ஒரு புறம் ஒதுக்கினாலும், சமாதானத் தீர்வுக்கான மக்களின் ஆணை கிடைத்தவுடனாகுதல் போரைநிறுத்த மனதார முயற்சி எடுக்கவில்லை. அவ்வாறு செய்திருந்தால் சமாதானத் தீர்வுக்கான ஆரம்பச் சூழ்நிலையை கடந்த நான்கு மாதங்களில் உருவாக்கி இருக்கலாம். அரசாங்கம் பலமான நிலையில் நின்று பேசினால் மட்டுமே அரசியல் தீர்வை எய்த முடியும் என்று அரசு கணக்குப் போட்டதோ என்னவோ!

போரினால் நாட்டில் உயிர், உடைமை அழிவுகள் பெருகுகின்றன; பொருளாதாரம் நாசமாகிறது; பிறரிடம் கையேந்தியே நாட்டின் வாழ்க்கையைத் தக்க வைக்க முடிகிறது; என்ற இன்னோரன்ன பாதிப்புகளைக் கணக்குப் போட்டுப் பார்த்திருந்தால், போரை நிறுத்தியிருக்கலாம்; நிறுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொண்டிருக்கலாம்.

ஆனால் அரசின் நடவடிக்கை இரண்டு தோணிகளில் கால் வைப்பதாக அமைந்திருக்கிறது

ஜனாதிபதி சமாதானத் தீர்வு காணப்போவதாகக் கூறினாலும், போரை நிறுத்தி மக்களின் இயல்பு நிலை வாழ்க்கையைச்சீராக்க உரிய, போதிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை.

சமாதான முயற்சிகளில் வெறும் பேச்சுவார்த்தைகளும் கலந்துரையாடலும் பத்திரிகை அறிக்கைகளும் அட்டவணைகளும் வெற்றி தரமாட்டா. அரசியல் தீர்க்க தரிசனமும் சமயோசிதமும், சாதுரியமும் தேவை. மக்களின் நலன் நாடிய, மனதார்ந்த செயற்பாடு தேவை.

ஆனையிறவு நிகழ்வுகளைப் பிரேத பரிசோதனை செய்வதனால் சமாதானத் தீர்வை எட்டிவிட முடியாது. போரை நிறுத்தி, அதன் அவலங்களில் இருந்து மக்கள் விடுபட வழி செய்வதோடு, சமாதான முயற்சிகளை முன்னெடுப்பது அவசியம்.

# குடாநாடு சுத்தமான பூமியாக மாறுவதற்கு சுகாதாரம் அவசியம்

**வே. மகேந்திரன்**
**( சுன்னாகம் )**

யாழ். மாவட்ட சுகாதார சேவைகளை அபிவிருத்தி செய்ய வெளிநாட்டு நிறுவனங்களோ அல்லது ஐ. நா. அபிவிருத்தித் திட்டமோ போதிய நிதியை வழங்க முன்வந்தால் நன்கு திட்டமிட்டு அவசர தேவைகளை அறிந்து செயற்படுத்த வேண்டும்

நோய்த்தடுப்பு முறைகளுக்குமுன்னுரிமை அளித்துப் பொதுச் சுகாதார சேவையை அபிவிருத்தி செய்ய வேண்டும். இவற்றைக் கண்டறிந்து செயற்படுத்திப் பொதுச் சுகாதார வைத்திய நிபுணர்கள், நில, நீர்வள சம்பந்தமான பல்கலைக்கழக நிபுணர்கள், இப்பகுதி நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் இதில் ஆர்வம் உள்ளவர்கள் திட்டமிட வேண்டும்.

எனவே முன்னுரிமை அளிக்கப்பட வேண்டிய சேவைகளில் சிலவற்றை ஆராய்வோம்.

இங்கு மக்கள் கிணற்று நீரையே குடிப்பதற்கும் சமைப்பதற்கும் பாவிக்கிறார்கள். கிணற்றுநீர் எந்த அளவுக்கு சுகாதாரமானது என்பது ஒருவருக்கும் தெரியாது. சுகாதாரபகுதியினர்கொதிக்க வைத்து ஆறிய நீரையே பருகும்படி ஆலோசனை கூறுகிறார்கள்.

எல்லோராலும் எப்பொழுதும் இந்த ஆலோசனையைச் செயற்படுத்த முடியாது. எனவே பின்பற்றமாட்டார்கள், வாளி மலசலகூட காலத்தில் குறிப்பிட்ட இடங்களிலேயே மனிதக் கழிவுகள் புதைக்கப்பட்டன. அதனால் கிணற்று நீர் அசுத்தமடையாமல் இருந்திருக்கலாம்.

இன்று அப்படி அல்ல, கிணற்றுக்கும் மலசலகூட குழிக்கும் 25 யார் தூரம் இருக்க வேண்டுமென்பதை கடைப்பிடிக்க முடியாது காணிகள் சிறுகி குடியிருப்பு நிலங்கள் ஒரு பரப்பு மட்டில் வந்து விட்டன.

ஆகவே பாவிப்பில் இருக்கும் கிணற்று நீர் சுத்தமானதா என்பதைக் கண்டறிய பரந்த அளவில் பரிசோதிக்கப்படவேண்டும் (Chemical and Micro Biological Examination) இப்படியான பரிசோதனை அவசியமில்லை அல்லது சாத்தியமில்லை என தீர்மானிக்கப்படுமானால் கொழும்பு போன்று கழிவுகளை குழாய் மூலம் கடலுக்குள் செலுத்த வேண்டியது அவசியமா என்பதை அறிந்து செயற்பட வேண்டும்.

அடுத்தது நுளம்புப் பிரச்சினை இந் நுளம்புகள் மலசல கூட குழிகளில் தான் பெருகுகின்றன என்பதை அவதானிக்கக் கூடியதாக இருக்கிறது.

மலசலகூட குழி மூடியில் உடைவு ஏற்படுவதினால் நுளம்புகள்பெருகிவருகின்றன எனவே பரந்த அளவில் சகல குழிகளும் பார்வையிடப்பட்டுத் திருத்தப்பட வேண்டும்.

மூன்றாவதாக — உணவுக் கடைகளில் கண்ணாடிப் பெட்டிகளில் தயாரித்த உணவை வைப்பதினால் மட்டும் பிரச்சினை தீராது அங்கீகரிக்கப்பட்ட இடங்களில் உணவுகள் தயாரிக்கப் படுகின்றனவா? தயாரிப்பவர்கள், பரிமாறுபவர்கள் சுகதேகிகளா? என்பதற்கு சான்றிதழ்கள் வழங்கப்பட வேண்டும்.

சமைத்த உணவு எப்படி கையாளப்படவேண்டும் என்பது போன்ற சுகாதார கல்வி இவர்களுக்கு அளிக்கப்பட வேண்டும்.

சிகிச்சையின் போது மன நோயாளர் மற்றும் வயோதிபர் சம்பந்தப்பட்டமட்டில் விசேட கவனம் செலுத்தப்படவேண்டும்.

மந்திகை வைத்தியசாலையில் மனநோயாளர் பகுதி ஆரம்பிக்கப்பட்டு பல வருஷங்கள் சென்றுவிட்டன. ஆனால் உருப்படியான கட்டடம் இல்லை.

சகல வசதிகளையும் கொண்டு வைத்தியர்களின் ஆலோசனை பெறப்பட்டு ஒரு சீரான விடுதி அமைக்கப்பட வேண்டும். தெல்லிப்பழை விடுதி உட்பட சகல மன நோயாளர் விடுதிகளையும் சுற்றித் தடை அமைக்கப்பட வேண்டியதும் அவசியமாகும்.

நோய் வாய்ப்பட்ட பல வயோதிபர்கள் பராமரிப்பு, வைத்திய வசதி இன்றிக கஷ்டப்படுகிறார்கள். வைத்திய சாலைகளில் தனிச்சிகிச்சை விடுதி நிறுவப்பட்டால் பெரும் உதவியாக இருக்கும்

இவற்றை விட, மருத்துவ உதவியாளர்களின் பற்றாக் குறையை நீக்க அங்கீகரிக்கப்பட்ட கல்லூரிகள் அமைக்கப்பட்டால் இங்கு பயிற்சி பெற்றவர்கள் வெளிநாடுகளிலும் வேலை வாய்ப்பைப் பெறுவார்கள்.

பல்கலைக்கழக கல்வி வாய்ப்பு ஒருசில புள்ளி குறைவினால் கிடைக்காத மாணவர்களுக்கு இக்கல்விப் பயிற்சி உகந்ததாகவும் வாய்ப்பானதாகவும் அமையும்.

# ஓகஸ்ட் முதல்வாரத்தில் நாடாளுமன்றம் கலைப்பு?

கொழும்பு, ஏப்ரல் 25

நாடாளுமன்றத்தை ஓகஸ்ட் முதல் வாரத்தில் கலைக்க அரசு முடிவு செய்துள்ளது என்று அரச தரப்புப் பேச்சாளரை மேற்கோள் காட்டி கொழும்புச் செய்தி வட்டாரம் ஒன்று தெரிவித்தது.

தேர்தலில் போட்டியிடுவதற்கான நடவடிக்கைகளை பொதுமக்கள் ஐக்கிய முன்னணியில் அங்கம் வகிக்கும் கட்சிகள் மேற்கொண்டுள்ளன.

ஆனால் இ. தொ. காவும், முஸ்லிம் காங்கிரஸும் தனித்துப் போட்டியிடப்போவதாக அறிவித்துள்ளன.

இந்த இரு கட்சிகளையும் பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் சார்பில் போட்டியிட வைக்க அரச முக்கியத்தர்கள் பேச்சுக்களை ஆரம்பித்துள்ளனர்.

அதேசமயம்-- ஐ. தே.கவும் தேர்தல் பணிகளை முடுக்கி விட்டுள்ளது. கட்சி அமைப்பாளர்களுடன் கலந்துரையாடி வேட்பாளர் பட்டியலைத் தயாரிக்கும் பணியில் அக்கட்சிப் பிரமுகர்கள் ஈடுபட்டுள்ளனர்.

ஜே. வி. பியும் தேர்தலில் போட்டியிடத் தயாராகி வருகின்றது. கட்சி ஆதரவாளர்களுடன் அது கலந்துரையாடி வருகின்றது.

(இ-3)

## நாட்டில் சமாதானம் வேண்டி கைதடியில் மஹாயாகம்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 25

நாட்டில் யுத்தம் நிறுத்தப்பட்டு சமாதானம் ஏற்படுத்தப்பட வேண்டும் எனக் கோரி இந்துசமயப் பேரவையின் ஏற்பாட்டில் கைதடி சைவச் சிறுவர் இல்லத்தில் அமைந்துள்ள ஸ்ரீ சிவகாமசுந்தரி சமேத தில்லை நடராஜப் பெருமானுக்கு நாளை புதன்கிழமையும் நாளை மறுதினம் வியாழக்கிழமையும் விசேட ருத்திர மஹாயாகம் நடைபெற உள்ளது.

இந்த மஹா யாகம் சிறப்புற நடைபெற சகல தரப்பினரையும் பிரார்த்திக்குமாறு இந்துசமயப் பேரவை கேட்டுள்ளது.

நல்லை ஆதீனம், சர்வதேச இந்துக் குருமார் ஒன்றியம், நியந்த சிவானுபூதிச் செல்வர்கள், வர்த்தகர்கள் ஆகியோரின் உதவியுடன் இந்த மஹாயாகம் இடம் பெற உள்ளது.

நாளை மறுதினம் யாகத்தின் இறுதியில் நாட்டு மக்களுக்கு சமாதானம் வேண்டி இந்து சமயப் பேரவைத் தலைவர் அருட்கவி சீ. விநாசித்தம்பி தலைமையில் அருளாசி வழங்கும் நிகழ்வும் இடம்பெறும்.

இந்த மஹாயாகத்தில் கலந்து கொள்பவர்கள் ஆசாரசீலர்களாக திரிகரண சுத்தியுடன் பங்குபற்றும்படி இந்து சமயப் பேரவை கோரி உள்ளது. (இ-6)

**நாளை**
**சித்திரை 14**
**புதன்கிழமை**

திதி: ஸப்தமி
முற்பகல் 10.03 வரை.
நட்சத்திரம்: உத்தராடம்
பிற்பகல் 5.04 வரை.
சுபநேரம்: 04.29 05.59
ராகுகாலம்: 11 59 - 1 29
(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி )

**உதய வாக்கு**

உலகில் உயிரோடு வாழ்வதில் மட்டும் வாழ்க்கை இல்லை. உயரிய கொள்கைகளுக்காக மடிவதிலும் உள்ளது.

- அல்பெயர்

## பவள விழா

சண்டிலிப்பாய், ஏப்ரல் 25

சைவசமய அறிஞரும், கீரிமலை ஸ்ரீ நகுலேஸ்வரர் ஆலய ஆதீனகர்த்தாவுமான பிரம்மஸ்ரீ கு. நகுலேஸ்வரக் குருக்களுக்கு 75 வயது பூர்த்தியடைவதை முன்னிட்டு பவள விழா ஒன்றை அடுத்த மாதம் பூசம் தினத்தன்று நடத்துவதற்கு பவளவிழாச் சபையினர் நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றனர்.

சாந்தி ஹோமம், சிறப்பு மலர் வெளியீடு என்பன உட்படப் பல்வேறு நிகழ்வுகள் இந்த விழாவில் இடம் பெறவுள்ளன. (இ-135)

## இளம் குடும்பஸ்தர் மரணம்

நெல்லியடி, ஏப்ரல் 25

மூளைக் காய்ச்சல் நோயினால் பாதிக்கப்பட்டிருந்த குடும்பஸ்தர் ஒருவர் தெல்லிப்பழை மாவட்ட மருத்துவமனையில் நேற்று முன்தினம் மரணமானார்.

வல்வெட்டித்துறை மாவட்ட மருத்துவமனையிலிருந்து அனுப்பி வைக்கப்பட்டிருந்த வல்வெட்டியைச் சேர்ந்த இளம் குடும்பஸ்தரான கிருஷ்ணசாமி தெய்வேந்திரன் (வயது 24) என்பவரே மரணமானவர் ஆவார்.

இது சம்பந்தமாக ஸ்தலத்துக்குச் சென்ற மல்லாகம் மாவட்ட நீதிவான் எஸ். பி. சுப்பிரமணியம், விசாரணைகளை மேற்கொண்ட பின் மனைவியிடம் சடலம் கையளிக்கப்பட்டது.

(இ-109)

## பொன்னாடை போர்த்திக் கௌரவிப்பு

சண்டிலிப்பாய், ஏப்ரல் 25

புராதகல் நுணசை முருகமூர்த்தி கோயில் வருடாந்த மஹோற்சவத்தின் போது ''கந்தபுராணம்'' தொடர் சொற்பொழிவு நிகழ்த்திய சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி ஆசிரியர் சைவப்புலவர் செ. கந்த. சத்தியதாசன் பொன்னாடை போர்த்தப்பட்டு பாராட்டிக் கௌரவிக்கப்பட்டார்.

தீர்த்தத்திருவிழா தினமான கடந்த 18 ஆம் திகதி நடைபெற்ற இந்த நிகழ்வில் ஆலய குரு சிவஸ்ரீ சிவமூர்த்திக் குருக்கள் ஆசியுரை நிகழ்த்தினார். ஆலய தர்மகர்த்தா க. பாலசுப்பிரமணியம் பொன்னாடை போர்த்தினார்.

(இ-135)

## தாக்குதலில் இருவர் காயம்

தென்மராட்சி ஏப்ரல் 25

வெவ்வேறு இடங்களில் இனந்தெரியாதோரின் தாக்குதலுக்கு இலக்கான இருவர் காயமடைந்து சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சனிக்கிழமை இரவு மந்துவில் பகுதியில் வீட்டில் இருந்த வேலுவன் நடராசா (வயது 54) என்பவர் தாக்குதலில் தலையில் காயம் அடைந்தார்கள்.

தவனை இயற்றாலைப் பகுதியில் பாலசுப்பிரமணியம் என்பவர் கத்திக்குத்துக்குள்ளானார்

(இ-117)

## திறப்பு விழா

கொழும்புத்துறை, ஏப்ரல் 25

ஊர்காவற்றுறைப் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட கரம்பன் கிழக்கு கிராம அலுவலர் பிரிவில் ''யுனிசெவ்'' நிறுவனத்தின் அனுசரணையுடன் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட பாலர் பாடசாலையின் கட்டத் திறப்புவிழா அண்மையில் இடம்பெற்றது

(இ-30)

# நிரந்தர நியமனக் கடிதத்தை எதிர்பார்க்கும் 300 பட்டதாரிகள்

வலி.தென்மேற்கு, ஏப்ரல் 25

8 ஆயிரம் பட்டதாரிகள் நியமனத் திட்டத்தின் கீழ் யாழ். மாவட்டத்தில் நியமனம் பெற்ற 300 பட்டதாரிகளுக்கு மே 26 ஆம் திகதியுடன் ஒரு வருட பயிற்சிக் காலம் முடிவடைகின்றது.

நியமனக் கடிதத்தில் குறிப்பிட்டது போன்று ஒரு வருட பயிற்சியினை முடிப்பவர்களுக்கு நிரந்தர நியமனம் ஜூன் முதலாம் திகதியில் இருந்து வழங்கப்பட வேண்டும்.

இதேவேளை — நிரந்தர நியமனக்கடிதம் உரிய காலத்தில் அனுப்பி வைக்கப்படாத பட்சத்தில் மே 26 ஆம் திகதிக்குப் பின்னர் சம்பந்தப்பட்ட அரச திணைக்களங்கள் சம்பளம் வழங்குவதில் கஷ்டம் ஏற்படலாம் எனத் தெரியவருகிறது.

மேலும் யாழ். மாவட்டத்தில் பயிற்சி பெறும் பட்டதாரி உத்தியோகத்தர்கள் தமக்கு நிரந்தர நியமனம், சம்பளம், கடமைப் பட்டியல்கள் ஆகியவற்றை அனுப்பி வைக்குமாறு திணைக்களத் தலைவர் ஊடாக சம்பந்தப்பட்ட அமைச்சுச் செயலாளர்களுக்கும் வடக்கு — கிழக்கு மாகாண செயலாளர்களுக்கும் கடிதங்களை அனுப்பி வைத்துள்ளனர்.

யாழ். மாவட்டத்தில் அபிவிருத்தி உதவியாளர்கள், அபிவிருத்தி இணைப்பாளர்கள், சமுர்த்தி கணக்காய்வாளர், மொழிபெயர்ப்பாளர், நூலக அபிவிருத்தி உதவியாளர், வரவு—செலவுத்திட்ட உதவியாளர், ஆராய்ச்சி உதவியாளர்கள், இளைஞர் சேவை அதிகாரிகள் என 300 பேர் நிரந்தர நியமனத்துக்கான கடிதத்தை எதிர்பார்த்துள்ளனர்.

(இ-185)

## இடமாற்றமும் நியமனமும்

புத்தூர் மத்திய மருந்தகப் பொறுப்பதிகாரி டாக்டர் திருமதி விமலாதேவி தங்கவேல் கடந்த வெள்ளிக்கிழமை முதல் மந்திகை மருத்துவமனை வெளிநோயாளர் பிரிவுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

இதேவேளை புத்தூர் மத்திய மருந்தகத்துக்கு டாக்டர் கே. முத்துக்குமாரசாமி நியமிக்கப்பட்டுள்ளார். (இ-109)

## நாய்களுக்கு நோய்த் தடுப்பூசி

யாழ்ப்பாணம், ஏப்ரல் 25

யாழ் மாநகரசபைப் பகுதியில் உள்ள வீட்டு வளர்ப்பு நாய்களுக்குத் தடுப்பூசி போடும் நடவடிக்கைகள் நேற்று மீண்டும் மாநகரசபை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையால் ஆரம்பிக்கப்பட்டன.

இதன்படி இன்று தொடக்கம் வெள்ளிக்கிழமை வரையும் தடுப்பூசி போடப்படும் நிலையங்கள் வருமாறு:

★ இன்று செவ்வாய் காலை 8.30 மணி தொடக்கம் 12.30 வரை இராசாவின் தோட்டம், அருள்மாதா சனசமூக நிலையம். பிற்பகல் 2 மணி தொடக்கம் 4.30 மணி வரை அரசடி, சனசக்தி சனசமூக நிலையம்.

★ நாளை புதன் காலை 8.30 மணி தொடக்கம் 12.30 மணி வரை பாண்டியன் தாழ்வு, சந்தனமாதா தேவாலயம். பிற்பகல் 2 மணி தொடக்கம் 4.30 மணி வரை கொண்டலடி சனசமூக நிலையம்.

★ வியாழன் காலை 8.30 மணி தொடக்கம் 12.30 மணி வரை குருநகர் சனசமூகநிலையம். பிற்பகல் 2 மணி தொடக்கம் 4.30 மணி வரை சுண்டுக்குழி சனசமூகநிலையம்.

★ வெள்ளி காலை 8.30 மணி தொடக்கம் 12.30 மணி வரை குருநகர் சந்தை. பிற்பகல் 2 மணி தொடக்கம் 4.30 மணிவரை கிறிஸ்துராசா தேவாலயம், கொய்யாத்தோட்டம்.

ஏனைய இடங்கள் பற்றிய விவரங்கள் பின்பு உதயனில் வெளியாகும். (இ-10)

## அன்பளிப்பு

தென்மராட்சி, ஏப்ரல் 25

சாவகச்சேரி மாவட்ட வைத்தியசாலைக்கு மருத்துவ உபகரணங்களை அன்பளிப்பாக வழங்குவது அதிகரித்துள்ளது.

கடந்த வாரம் சாவகச்சேரி ஸ்ரீ பகவான் சத்திய சாயி பாபா சேவாச்சிரமத்தினர் இரத்த அமுக்கம் பரிசோதிக்கும் கருவியினையும் ஒரு தொகுதி காய்ச்சல் பரிசோதிக்கும் கருவிகளையும் (தேமா மீற்றர்) அன்பளிப்பாக வழங்கியுள்ளனர்.

சேவாச்சிரமத்தின் தலைவர் கு. குமரகுரு மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் எஸ். யமுனானந்தாவிடம் இவற்றை வழங்கினார்.

(இ-117)

## வேலைநிறுத்தம்செய்ய இ. தொ. கா. முஸ்தீபு

கொழும்பு, ஏப்ரல் 25

தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வுப் பிரச்சினை தொடர்பாக நாளை மறுதினம் சாத்தியமான பதில் கிடைக்காவிட்டால் பெரிய அளவில் வேலை நிறுத்தம் நடத்தப்படும் என்று இ. தொ. கா. எச்சரித்துள்ளது.

தோட்டத் துரைமார் சங்கப் பிரதிநிதிகளுக்கும் தொழிற் சங்கப் பிரதிநிதிகளுக்கும் இடையில் தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வு தொடர்பாகக் கடந்த வாரங்களில் பல தடவைகள் பேச்சுக்கள் இடம்பெற்றன. ஆனால் அந்தப் பேச்சுக்கள் தோல்வியில் முடிவடைந்தன.

நாளை மறுதினம் வியாழக்கிழமை இறுதிக் கட்டப் பேச்சுக்கள் இடம்பெறவுள்ளன.

இந்தப் பேச்சில் உடன்பாடு எட்டப்படாதவிடத்து, சகல தோட்டத்தொழிலாளர்களும் வேலை நிறுத்தத்தில் குதிப்பர் என்று இ. தொ. கா. உறுப்பினரும் பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான பி. வி. சென்னன் தெரிவித்தார்.

(இ-3)

## சான்றிதழ் வழங்கும் வைபவம்

காரைநகர், ஏப்ரல் 25

தீவகக் கல்வி வலயத்தின் அனுசரணையுடன் காரைநகர் கலாநிதி ஆ. தியாகராசா மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற தொடர்பாடலுக்கான ஆங்கிலக்கற்கைநெறிப் பயிற்சியைப் பூர்த்தி செய்தவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் வைபவம் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு வித்தியாலய மண்டபத்தில் நடைபெறும்.

ஆங்கில ஆசிரிய ஆலோசகர் பொ. ஆறுமுகம் தலைமையில் நடைபெறும் இந்த வைபவத்தில் தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு சான்றிதழ்களை வழங்குவார்.

(இ-73)

## சமய தீட்சை

அகில இலங்கை சைவப் புலவர் சங்கம், நல்லை ஆதீனத்தில் கடந்த வெள்ளிக்கிழமையன்று நடத்திய சமய தீட்சையின் போது 27பேர் சமய தீட்சையைப் பெற்றனர். இந்த சமய தீட்சையை பிரம்மஸ்ரீ திருஞானசம்பந்த குருக்கள் வழங்கினார்

(இ-135)

# மாறிவரும் சமுதாய வாழ்வில் சமய விழுமியம் பாதுகாக்கப்பட வேண்டும்

## சைவப்புலவர் சங்க விழாவில் உரை

திருநெல்வேலி, ஏப்ரல் 25

''மாற்றமடைந்து வரும் எமது சமுதாய வாழ்வில் சமய விழுமியங்கள் நலிவடையா வண்ணம் பாதுகாக்கப்பட வேண்டியது மிகவும் அவசியம். சைவ மரபு, சைவப் பண்பாடு திருக்கோயில் பண்பாடு, என்பன எமது அடுத்த தலைமுறையினருக்குச்சென்றடைவதற்கு புதிதாகப் பட்டம் பெறும் சைவப் புலவர்கள் உதவ முன்வர வேண்டும்.

அகில இலங்கைச் சைவப் புலவர் சங்கத்தின் 40 ஆவது ஆண்டு நிறைவு விழாவிலும் பட்டமளிப்பு விழாவிலும் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரை நிகழ்த்துகையில் யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறைத் தலைவர் பேராசிரியர் ப. கோபாலகிருஷ்ணஐயர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

சங்கத்தின் உபதலைவர் சைவப் புலவர் சு. செல்லத்துரை தலைமையில் கடந்த 23 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் வண்ணை நாவலர் மகா வித்தியாலய மண்டபத்தில் நடைபெற்ற இந்த விழாவில் வரவேற்புரையைச் சைவப் புலவர் கா. கமலநாதன் நிகழ்த்தினார்.

பேராசிரியர் ப. கோபால கிருஷ்ண ஐயர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது:-

மனுக்குலத்தின் உய்வுக்கும் மேம்பாட்டுக்கும் எமது சைவ நெறி காட்டும் வழியே சிறந்த வழி ஆகும். நமது நாட்டில் மாத்திரமன்றி வெளிநாடுகளிலும் அறிஞர்களால் இது போற்றப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்டு வந்துள்ளது.

திருமூலர் அன்று கூறிய ''அன்பே சிவம்'' என்ற இரு சொற்கள் எமது நாளாந்த வாழ்வில் கடைப் பிடிக்கப்படுமானால் எவ்வளவோ பிரச்சினைகளைக் குறைத்துக் கொள்ள முடியும்.

சகோதரத்துடன் அன்பு, அயலவருடன் அன்பு, இறைவனுடன் அன்பு என்றுபல வகைகளில் அன்பினைச் செலுத்த முடியும். உண்மையான சைவர்களாக வாழ வேண்டுமானால் அன்பு, சகிப்புத்தன்மை, பொறுமை, மற்றவர்களுக்கு உதவி செய்தல் ஆகியனவற்றை நாளாந்த வாழ்வில் கடைப்பிடித்து ஒழுக வேண்டும்.

சமுதாயத்திற்கு உதவுதல், பிறருக்குச் சேவை செய்வது என்பன சைவசமயத்தினருக்குக் குறைவு என்று பிற சமயத்தவர் கூறும் நிலையும் இருந்து வருகின்றது.

ஆகவே இம்மைக்கும் மறுமைக்கும் வழிகாட்டும் எமது சமயக் கருத்துகளைப்பற்றி எடுத்துக் கூறி மக்களை நல்வழிப்படுத்துவது இன்று காலத்தின் தேவையாக உள்ளது.

இன்று எமது சமய விழுமியங்கள் பல வகையிலும் நலிவடைந்து கொண்டு வருகின்றன. குருபக்தி, சகோதர உறவு, பெரியோரைப் பணிதல் என்பன அருகி வருகின்றன. இவ் விடயத்தில் சைவப் புலவர் சங்கம் போன்ற நிறுவனங்கள் அதிக அக்கறை கொண்டு செயற்பட வேண்டும். சைவசமயக் கருத்தரங்குகள் அடிக்கடி நடத்தப்பட்டு அவற்றின் மூலம் உண்மையான சமயக் கருத்துகள், கோட்பாடுகள் என்பன முன்வைக்கப்பட வேண்டியது அவசியம்.

இந்தப் பட்டமளிப்பு விழா எதிர்காலத்தில் சமய எழுச்சி விழாவாக இங்கு நடைபெற வேண்டும். வருடம் தோறும் இங்கு சைவப் புலவர் பட்டம் பெறுவோரின் எண்ணிக்கை அதிகரித்துக்கொண்டு வருவது எமக்கு மகிழ்ச்சியைத் தருகின்றது. பட்டம் பெறுவதோடு நின்றுவிடாது இவர்களது செயற்பாடுகள் எமது சமய விருத்திக்கும் உதவ வேண்டும்—என்றார்.

நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞான சம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள் ஆசியுரை நிகழ்த்துகையில் ''இங்கு சைவப் புலவர்கள் எமது பாரம்பரிய உடையணிந்து கொண்டு செயற்படுவது முன்மாதிரியாக உள்ளது. எமது சைவப் பண்பாட்டைப் பேணும் உடைகளை அணிவது வரவேற்கத்தக்கது. எமது சமயநெறிகள்—ஒழுங்குகள் நன்கு பேணப்படவேண்டியது அவசியம்'' —என்றார்.

பண்டிதர் வ. பேரின்பநாயகம் ''உவமையில்லாக் கலைஞானம்'' என்ற தலைப்பகத்தில் சிறப்பு சொற்பொழிவு நிகழ்த்தினார்.

சைவப் புலவர் பட்டம் பெற்ற 19 பேருக்கும், இளம் சைவப் புலவர் பட்டம் பெற்ற 22 பேருக்கும் பட்டமளிப்பு நடைபெற்றது. பேராசிரியர் ப. கோபால கிருஷ்ணஐயர் பட்டமளித்து சான்றிதழ்களை வழங்கினார்.

இந்த வருடம் நடைபெற்ற புராண படனப் போட்டியில் சித்தி அடைந்தவர்களுக்கும் பரிசில்கள் வழங்கப்பட்டன.

சங்கச் செயலாளர் செ. கந்த. சத்தியதாசன் நன்றியுரை நிகழ்த்தினார்.

(இ-135)


## சின்னஞ்சிறு விளம்பரம்

### தவறிவிட்டது

நாகமுத்து இளையதம்பி என்பவருடைய தேசிய அ. அ. [இல 550622033V], தொழில் அ.அ., இராணுவ அ. அட்டை என்பன 23-04-2000 அன்று நெல்லியடியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து நெல்லியடியிலுள்ள அமிர்தசுரபி உணவகத்தில் ஒப்படைத்து உதவவும். (75722)

வில்லு வீதி, புத்தளம் எனும் முகவரி கொண்ட சாமுவேல் ஜெயச்சந்திரன் போல் என்பவருடைய தேசிய அடையாள அட்டை [இல. 443141409V] 19-04-2000 அன்று யாழ்ப்பாணத்தில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து 30/2, விதானையார் ஒழுங்கை, சுண்டுக்குளி எனும் முகவரியில் அல்லது திரு. கந்தையா சிமெந்துக் கூட்டுத்தாபனம், கன்னாதிட்டிச் சந்தியடி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் ஒப்படைத்து உதவவும். (75721)

### இறைச்சிக் கோழி

புறொயிலர், விறாத்து, கல்பேட்ஸ் தினமும் சுகாதார முறையில் நுட்பமான நிறுவையில் சுறுசுறுப்பான சேவையில் கிடைக்கும். தொடர்பு; அப்பன், யாழ். (மீன் சந்தை முன்பாக) (75644)

புறொயிலர், விறாத்து, கல்பேட்ஸ் தினமும் சுகாதார முறையில் நுட்பமான நிறுவையில் சுறுசுறுப்பான சேவையில் கிடைக்கும். தொடர்பு: சீமான், குருநகர் (மீன் சந்தை முன்பாக) யாழ்ப்பாணம். (75645)

### ஆனந்தா சோதிட நிலையம்

கல்வியில் சித்தியா? உத்தியோகம் கிடைக்குமா? விவாகம் நடைபெறுமா? மற்றும் எவையானாலும் கேட்டுப் பாருங்கள். டாக்டர் த.சிவானந்தன், பிரபல சோதிடர் செட்டித் தெருச் சந்தி, நல்லூர். (75632)

### வீடு விற்பனைக்கு

பரமேஸ்வராச் சந்தியில் இருந்து ஏறக்குறைய 200 யார் தூரத்தில் சகல வசதிகளும் கொண்ட புதிய வீடு விற்பனைக்கு உண்டு. தொடர்பு: வண்ணக் காலணிப்பூங்கா, 315-C, பலாலி வீதி, பரமேஸ்வராச் சந்தி, திருநெல்வேலி. (75688)

### விற்பனைக்கு

ஐஸ்கிறீம், ஐஸ்பழம் தயாரிக்கும் மெசின் (புதியதும்), கோப்பி வறுக்கும் மின்சார றோஸ்ரர் என்பன விற்பனைக்கு உண்டு. தொடர்பு: றிக்கோ பத்மநாதன், 370, ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம். (75702)

### மணமகள் தேவை

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1962 இல் பிறந்த உத்தராட நட்சத்திர 25 கிரக பாவமுடைய லண்டன் அரசாங்கத்தில் பொறியியலாளராகக் கடமை புரியும் மணமகனுக்கு ஏற்ற மணமகள் தேவை. பட்டதாரிகள் விரும்பத்தக்கது. விள. இல. 1042, மே/பா உதயன். (75473)

## காசாளர் தேவை

ஸ்ருடியோவுக்கு பெண் காசாளர் தேவை

நேரடியாகத் தொடர்பு கொள்ளவும்:

**கோல்டன் டக்**

இருபாலைச் சந்தி, கோப்பாய். [75727]

# புலிகளை முற்றாக ஒழிக்காமல் சமாதானப் பேச்சில் பயனில்லை

## புதிய சிங்களக் கட்சியின் தலைவர் கூறுகிறார்

கொழும்பு,ஏப்.25

புலிகளை முற்றாக அழிக்காமல் சமாதானப் பேச்சு என்று கூறிக் கலந்தாலோசனை நடத்துவதில் பயனில்லை.

'சியல உரிமைக்கட்சி' என்ற புதிய சிங்களக் கட்சியின் தலைவர் திலக் கருணரட்ண இவ்வாறு கூறி உள்ளார். 'லக்ஹண்ட' சிங்கள வானொலிக்கு அளித்த ஒரு செவ்வியிலேயே அவர் இதனைக் கூறினார்.

முதலில் இந்த நாட்டில் பயங்கரவாதத்தை இல்லாது ஒழிக்க வேண்டும். தமிழ் மக்களுக்கு அவர்களின் அரசியல் தலைவர்களை அவர்களாகத் தெரிவு செய்யும் உரிமையைப் பெற்றுக் கொடுக்க வேண்டும்.

இந்நாட்டில் உள்ள பெரும்பான்மை இன சமூகம் - இனம் - பிரதான இரு கட்சிகளினால் பிரிந்து நிற்கிறது. இவ்வாறு பெரும்பான்மை இனம் பிரிந்து நிற்பதால் அவர்களின் அரசியல்பலம் பூஜ்ஜியத்துக்கு இறங்கி விடுகிறது. அதனால்தான் எந்தக் கட்சியாக இருப்பினும் சிறுபான்மை இனத்தவரின் ஆதரவையும் பெற்றே ஆட்சி அமைக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்படுகிறது - என்று அப் பேட்டியில் அவர் தெரிவித்தார். (ஐ)

# சந்தேகநபருக்கு பிடி ஆணை

நெல்லியடி,ஏப்.25

புலோலி, புற்றாளைப் பகுதியில் உள்ள ஆலயக் கிணறு ஒன்றில் இளைஞன் ஒருவர் கை, கால் கட்டப்பட்ட நிலையில் சடலமாக மீட்கப்பட்ட சம்பவம் தொடர்பான சந்தேக நபர் ஒருவருக்கு பருத்தித்துறை மாவட்ட நீதிவான் எஸ்.ஏ.ஈ.ஏகநாதன் பிடி ஆணை பிறப்பித்துள்ளார்.

கடந்த வருடம் ஒக்ரோபர் மாதம் 15ஆம் திகதி இடம்பெற்ற இச்சம்பவத்தில், புலோலி தெற்கைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை பத்மநாதன் (வயது 27) என்பவரே கிணற்றிலிருந்து சடலமாக மீட்கப்பட்டிருந்தார்.

இந்த வழக்கு விசாரணை நேற்றுக் காலை பருத்தித்துறை மாட்ட நீதிமன்றில், நீதிவான் எஸ்.ஏ.ஈ.ஏகநாதன் முன்னிலையில் எடுக்கப்பட்ட சமயம் சந்தேக நபர்களில் ஒருவரான புலோலி உபய கதிர்காமத்தைச் சேர்ந்த சின்னத்துரை சந்திரகுமார் (வயது 32) என்பவர் நீதிமன்றில் ஆஜராகவில்லை. குறித்த சந்தேக நபர், இருவாரங்களுக்கு முன்னர் கொழும்புக்குச் சென்று விட்டதாக நீதிவானின் கவனத்துக்கு கொண்டுவரப்பட்டது.

இதனை அடுத்தே சந்தேக நபரை, கொழும்பில் வைத்து உடனடியாக கைது செய்து, அடுத்த மாதம் 29ஆம் திகதி நீதிமன்றில் ஆஜர்படுத்தமாறு, கொழும்பு சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சகர் மூலம் நீதிவான் பிடி ஆணை பிறப்பித்தார்.

இந்தக் கொலைச் சம்பவம் தொடர்பாக, மேலும் இரு சந்தேக நபர்களான மார்க்கண்டு சண்முகலிங்கம் (வயது 38), க.கணேசலிங்கம் (வயது 40) ஆகிய இருவரையும்காங்கேசன்துறை பொலீஸ் நிலைய தலைமைக் காரியாலய இன்ஸ்பெக்டர் நீதிமன்றில் ஆஜர் செய்திருந்தார்.

இதேவேளை, கொலை செய்யப்பட்டதாகக் கருதப்படும் இளைஞனின் சடலம் மந்திகை மருத்துவமனைச் சவச்சாலையில் வைத்து பிரதேச பரிசோதனை செய்யப்பட்ட சமயம் அங்கு தொழிலாளியாகப் பணிபுரிந்த, வேலன் கணபதி (வயது 50) என்பவரிடமிருந்தும் வாக்கு மூலம் பெறப்பட உள்ளது.

எதிர்வரும் 3ஆம் திகதி பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றில் இவரை ஆஜர் செய்யுமாறு நீதிவான், பருத்தித்துறை பொலீஸாருக்கு உத்தரவிட்டார்.

இறந்தவர் சார்பில் சிரேஷ்ட சட்டத்தரணி சிவா பாலேந்திரா ஆஜரானார். (இ-109)

# விளக்க மறியலில் இருந்த ஏழுபேர் பிணையில் செல்ல நீதிமன்று அனுமதி

யாழ்ப்பாணம்,ஏப்.25

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் படையினரால் கைது செய்யப்பட்டு சந்தேகத்தின் பேரில் யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த கைதிகளில் 7 பேர் நேற்று யாழ். நீதிமன்றத்தால் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

சுப்பரமணியம் விஜயகுமார் (பிறவுண் வீதி, கொக்குவில்), கணேசு செல்வகுமார் (மானிப்பாய் வீதி, ஓட்டுமடம்), சிவஞானம் பிரதீபன் (ஐயனார் கோயிலடி, வண்ணார்பண்ணை), குலோத்துங்கன் கணேஷ் (மூத்தவிநாயகர் கோயில், கச்சேரி நல்லூர்), யேசுராசா குணசீலன் (ஐஸ்பிளான்ட் வீதி, குருநகர்), குணபாலசிங்கம் சுரேஷ்குமார் (அராலி வீதி, ஓட்டுமடம்) மாடசாமி விஜயபாலன் (கச்சேரி நல்லூர் வீதி) ஆகியோரே பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டவர்களாவர்.

இவர்கள் மீதான வழக்கு யாழ். நீதிமன்றத்தில் நேற்று நீதிவான் இ.த.விக்னராஜா முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்பட்டபோதே நீதிவான் இவர்களை 5ஆயிரம் ரூபா சரீரப் பிணையில் செல்ல அனுமதித்தார். இதேவேளை இவர்களை ஜூன் முதலாம் திகதி நீதிமன்றில் ஆஜராகுமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

இதேவேளை பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் சந்தேகத்தின் பேரில் யாழ்.சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த இருவரை கடந்த 20ஆம் திகதி பிணையில் செல்ல யாழ். நீதிமன்றம் அனுமதி வழங்கியிருந்தமை தெரிந்ததே. (இ-9)

### சீருடைத்துணி பெறுமாறு கோரிக்கை

இதுவரை இலவச சீருடைத் துணி பெறாத பளைக் கோட்டப் பாடசாலை மாணவர்கள், சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் எதிர் வரும் வியாழக்கிழமை காலை 9.00மணிக்கும் 12.00 மணிக்கும் இடைப்பட்ட நேரத்தில் பெற்றுக் கொள்ளுமாறு கோரப்பட்டுள்ளது.

# தொலைத் தொடர்பு வசதியை ஏற்படுத்துமாறு கோரிக்கை

வலி.கிழக்கு,ஏப்.25

தொலைத்தொடர்பு வசதிகள் சீர்குலைந்ததை அடுத்து குடாநாட்டு மக்கள் வெளியிடங்களுடன் எந்தவகையான தொடர்பையும் மேற்கொள்ள முடியாத இக்கட்டான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். எனவே தொலைத்தொடர்பு வசதிகளை மீண்டும் ஏற்படுத்திக் கொடுக்க சகல தரப்பினரும் ஒருங்கிணைந்து செயற்பட வேண்டும்.

இவ்வாறு யாழ்.மாவட்ட தொலைபேசிச் சேவையாளர்சங்கம் வேண்டுகோள்விடுத்துள்ளது.

கப்பல் மற்றும் விமானப்போக்குவரத்து தடைப்பட்டுள்ளது. அத்துடன் தொலைபேசிச் சேவைகளும் செயலிழந்துள்ளன. இதனால் குடாநாட்டு மக்கள் வெளியிடங்களுடன் தொடர்பு கொள்ளமுடியாத இக்கட்டான நிலைக்குத்தள்ளப்பட்டுள்ளனர்.

அதேவேளை தொலைத் தொடர்பு வசதிகள்குடாநாட்டில் ஏற்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து 2 ஆயிரத்துக்கும் அதிகமானோர் தொலைபேசி இணைப்புக்களைப் பெற்றிருந்தனர்.

இவர்கள் அனைவரும் தற்போது இக்கட்டான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். எனவே பொது மக்களினதும் தொலைத்தொடர்பு சேவையாளர்களினதும் நன்மை கருதி தொலைபேசித் தொடர்பை மீள ஏற்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்று சங்கம் கேட்டிருக்கிறது.

தொலைத் தொடர்பு வசதிகளை மீண்டும் ஏற்படுத்துமாறு கோரும் மகஜர்களை மேற்படி சங்கம் சம்பந்தப்பட்ட சகல தரப்பினருக்கும் அனுப்பிவைத்துள்ளது.

# தென்மராட்சியில் இடம்பெயர்ந்தோர் தங்கியுள்ள பாடசாலைகள் இயங்கவில்லை

தென்மராட்சி,ஏப்.25

தென்மராட்சிக் கல்வி வலயத்தைச் சேர்ந்த பலபாடசாலைகள் இடம்பெயர்ந்த மக்கள் தங்கியுள்ளதால் நேற்று இரண்டாம் தவணைக்காகத் திறக்கப்படவில்லை.

ஒட்டுவெளி அ.த.க. பாடசாலை, எழுதுமட்டுவாள் வடக்கு அ.த.க. பாடசாலை, விடத்தற்பளை கமலாசனி வித்தியாலயம், உசன் இராமநாதன் மகாவித்தியாலயம், மிருசுவில் றோமன் கத்தோலிக்க த.க.பாடசாலை, தவசிக்குளம் அ.த.க.பாடசாலை, மிருசுவில் வடக்கு அ.த.க.பாடசாலை, கொடிகாமம் அ.த.க.பாடசாலை, கொடிகாமம் திருநாவுக்கரசு வித்தியாலயம் ஆகியவற்றில் இடம்பெயர்ந்த மக்கள் தங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

சில பாடசாலைகளில் தங்கியுள்ள மக்களை அங்கிருந்து வெளியேற்ற கிராம அலுவலர்கள் முயற்சி செய்து வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை -

பளை கல்விக்கோட்டப் பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள், ஊழியர்கள் ஆகியோரைக் கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயத்தில்உள்ள கோட்டக் கல்வி அலுவலகத்தில் கையொப்பமிடுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

இப்பாடசாலைகளைத் தற்காலிகமாகத் தென்மராட்சியில் இயங்க வைப்பதற்கு முடிவு மேற்கொள்ளப்படாததால் அவர்கள் தற்போது தங்கியுள்ள இடங்களுக்கு அருகிலுள்ள பாடசாலைகளில் மாணவர்களைச் சேர்ப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-117)

### பாண்டிருப்பில் சுற்றிவளைப்பு

கொழும்பு,ஏப்25

கல்முனை பாண்டிருப்பு மாரியம்மன் கோவிலை அண்டிய பகுதி நேற்று முன்தினம் அதிகாலை 4 மணிமுதல் கல்முனை பொலீஸாரால் சுற்றிவளைக்கப்பட்டு தேடுதல் நடத்தப்பட்டது.

இந்தச் சுற்றிவளைப்பில் கைது செய்யப்பட்ட 50க்கும் மேற்பட்ட இளைஞர்கள் மேல் விசாரணைக்காக கல்முனை பொலீஸ் நிலையத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

தமது பிள்ளைகளை முகாமில் இருந்து அழைத்து வருவதற்காகச் சென்ற பெற்றோர் பொலீஸாரின் விசாரணைகள் முடிவுற்று பிள்ளைகள் முகாமைவிட்டு வெளியேறும் வரை கொளுத்தும் வெயிலில் தவம் கிடந்தனர். (ஐ)

# வன்னியில் தீப்பெட்டி ஒன்று 30 ரூபாவுக்கு மேல் விற்பனை!

## பணப்புழக்கம் பெருமளவு பாதிப்பு

யாழ்ப்பாணம்,ஏப்.25

வன்னியில் இராணுவக் கட்டுப்பாட்டில் இல்லாத பகுதிகளில் அத்தியாவசியப் பொருள்களுக்குப் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கிறது. அதேவேளை திரவப்பணம் இன்மையால் பணப்புழக்கமும் பெருமளவு பாதிக்கப்பட்டிருப்பதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தீப்பெட்டி ஒன்று 30ரூபாவுக்கு மேல் விலை போகிறது. சீனி கிலோ 75 ரூபா வரை விற்கப்படுகிறது. முத்திரை வகைகளுக்கு பெரும் தட்டுப்பாடு நிலவுவதால் வெளியிடங்களுக்கு கடிதங்களை அனுப்ப முடியாத நிலையும் அங்குள்ள மக்களுக்கு ஏற்பட்டிருக்கிறது.

வன்னியில் உள்ள உறவினர்களுக்கு இங்கிருந்து கடிதங்களை அனுப்பவோர் அவற்றுடன் முத்திரைகளையும் சேர்த்தே அனுப்பி வருகின்றனர். (ஐ-180)

### மாணிக்கக்கல் பொதி மறைவு

கொழும்பு,ஏப்.25

காலியிலிருந்து வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட மாணிக்கக்கல் பொதி ஒன்று கொழும்பு வெளிநாட்டுத் தபால் பொதி அறையிலிருந்து காணாமற் போயுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

காலி கிந்தோட்டையைச் சேர்ந்த வர்த்தகர் ஒருவர் இந்த மாணிக்கக்கல் பொதியைச் சுவீடன் நாட்டவர் ஒருவருக்கு ஏற்றுமதி செய்திருந்தார். (ஐ)

### பாடநூல் விநியோகம்

புன்னாலைக்கட்டுவன்,ஏப்.25

தென்மராட்சிக் கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலை மாணவர்களுக்கான இரண்டாம் கட்ட இலவசப் பாடநூல்கள் நாளைமறுதினம் வியாழக்கிழமை காலை 9 மணிமுதல் பிற்பகல் 2 மணிவரை சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் வைத்து விநியோகிக்கப்படவுள்ளன. (ஐ-8-133)

# நடமாடும் வியாபாரிகளால் பழுதடைந்த பிஸ்கட் விற்பனை

யாழ்ப்பாணம்,ஏப்.25

யாழ். பஸ் நிலையப் பகுதியில் உள்ள நடமாடும் வியாபாரிகள் சிலரால் காலாவதியான பிஸ்கட்டுக்கள் விற்பனை செய்யப்பட்டு வருவது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

அப்பகுதியில் பஸ்ஸுக்காகக் காத்து நின்ற பயணிகளுக்கே காலாவதியான பிஸ்கட்டுக்கள் விற்கப்பட்டுள்ளன.

குறைந்த விலையில் விற்கப்பட்ட இந்த பிஸ்கட்டுக்களை வாங்கிய பலரும் ஏமாற்றம் அடைந்தனர் என்று தெரிவிக்கப்படுகிறது. சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இது தொடர்பாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர்கள் தெரிவித்தனர். (இ-10-133)

# ஜீ.சீ.ஈ உயர்தர வகுப்புகள் மே மாதம் ஆரம்பமாகும்

யாழ்ப்பாணம்,ஏப்.25

அண்மையில் வெளியான கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையில் சித்தியடைந்தவர்களுக்கான உயர்தர வகுப்புக்களை எதிர்வரும் மே மாதம் முதல் ஆரம்பிக்குமாறு கல்வி, உயர் கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

இந்த அறிவித்தல் அடங்கிய சுற்றறிக்கை நாட்டிலுள்ள சகல பாடசாலைகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகக் கல்வி, உயர்கல்வி அமைச்சின் பேச்சாளர் ஆர்.பி.குணவர்த்தன தெரிவித்தார்.

அவர் மேலும்தெரிவிக்கையில- கடந்த காலங்களில் ஜி.சீ.ஈ. உயர்தர வகுப்புக்கள் ஓகஸ்ட் மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டு வந்தன. டிசெம்பர் மாதம் நடைபெறும் ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சை முடிவுகள் ஏப்ரல் மாதம் வெளியாகும்போது நான்கு மாதங்களுக்கு மாணவர்கள் கல்வியிலிருந்து விலகியிருக்கும் நிலைப்பாடு இருந்து வந்தது. இதனால் கல்விக்குப் புறம்பான நடவடிக்கைகளில் மாணவர்கள் நாட்டம் கொள்ளவும் நேரிடுகிறது.

எதிர்வரும் மே மாதம் முதல் ஜி.சீ.ஈ. உயர்தர வகுப்புக்களை ஆரம்பிக்கவுள்ள மாணவர்களுக்கான ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையை 2002 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் நடத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இவ்வாறு அவர் மேலும் தெரிவித்தார்.


## இன்று 15 ஆம் நாள் துயர் பகிர்வோம்

### பொன்னம்பலம் பீதாம்பரசிங்கம்

கைதடி நுணாவிலைப் பிறப்பிடமாகவும், திருநெல்வேலி முடமாவடியைப் புகுந்த இடமாகவும், தற்பொழுது கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னம்பலம் பீதாம்பரசிங்கம் அவர்கள் 11-04-2000 செவ்வாய்க்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் இந்திராணி (கனடா) அவர்களின் பாசமிகு கணவரும், பாமா (கனடா), உமா (கனடா),சியாமா(கனடா), குமுதா(கனடா), சுதன் (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற காசிநாதர் பொன்னம்பலம்- சிவகாமிப்பிள்ளை ஆகியோரின் பிரியமிகு மகனும், காலஞ்சென்ற சீனியர் சுப்பிரமணியம் - தங்கச்சியம்மா(கனடா) ஆகியோரின் அன்பு மருமகனும், பாலச்சந்திரன் (கனடா, முன்னாள் ஊழியர், யாழ்.தபாற்கந்தோர்) அவர்களின் பிரியமுள்ள மைத்துனரும், சிற்றி (கனடா), தமயந்தி(கனடா), றெபேக்கா(கனடா), டிலோஜ்ஜன்(கனடா), ஜிசிலி(கனடா), ரிஜோஜ்(கனடா) ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 15-04-2000 சனிக்கிழமை கனடாவில் உள்ள ரொறன்ரோ நகரில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:-
செ.சிவலிங்கம்
(உடன் பிறவாச் சகோதரன்)

'ஜனனோதயம்'
செல்வராசா அவெனியூ,
அம்மன் வீதி,
திருநெல்வேலி.

(75736)

### இராமகிருஷ்ணமிஷன் இல்ல சம்பவம்

# மட்டக்களப்பில் நேற்று கண்டன ஆர்ப்பாட்டம்

மட்டக்களப்பு,ஏப்.25

மட்டக்களப்பு கல்லடி இராமகிருஷ்ணமிஷன் இல்லத்தில் கடந்த 18 ஆம்திகதி இடம்பெற்ற கொள்ளைச் சம்பவத்தையும் இராமகிருஷ்ணமிஷன் தலைவர் சுவாமி ஜீவாத்மானந்தஜி துப்பாக்கி முனையில் மிரட்டப்பட்டதையும் கண்டித்து நேற்று மட்டக்களப்பு நகரில் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்று நடத்தப்பட்டது.

சிவானந்தா தேசியக் கல்லூரி, விவேகானந்த மகளிர் மகாவித்தியாலயம் ஆகியவற்றைச் சேர்ந்த மாணவர்களும், அதிபர். ஆசிரியர்களும், பொதுமக்களும் இதில் கலந்து கொண்டனர்.

மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான ஜோசப் பரராஜசிங்கம், பொன். செல்வராஜா ஆகியோரும் பேரணியில் கலந்து கொண்டனர்.

இந்தக் கொள்ளைச் சம்பவம் தொடர்பாக இராணுவத் தேசியத் துணைப்படையான ராஸிக் குழுவின் உறுப்பினர்கள் ஐந்து பேர் படையினரால் கைதுசெய்யப்பட்டமை தெரிந்ததே.

(ஐ-7)

## கிரனேட் வெடிப்பு

பொருள்களுடன் வந்த உழவு இயந்திரத்தில் கிரனேட் வெடித்ததில் அதில் பயணம்செய்த சிப்பாய் படுகாயமடைந்தார்.

இச்சம்பவம் கடந்த சனியன்று மாலை 5-30 மணிக்கு சாவகச்சேரிப் பொலீஸ் நிலையத்திற்கு அண்மையில் இடம்பெற்றது.

காயமடைந்த சிப்பாய்பலாலி ஆஸ்பத்திரிக்குக் கொண்டு செல்லப்பட்டார். (ஐ-117)

## பல்கலைக்கழகத்தில் சுவரொட்டிகள்

ஆனையிறவு வெற்றிக்காக புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் மற்றும்தளபதிகள்,போராளிகளுக்கு, வாழ்த்துத் தெரிவிக்கும் சுவரொட்டிகள் யாழ்.பல்கலைக்கழகச் சூழலில் நேற்று மாலை ஒட்டப்பட்டிருந்ததாகஅறியவந்தது. (ஐ-7)

## ஆணைக்குழு அதிகாரி காங்கேசனுக்கு

யாழ்ப்பாணம்,ஏப்.25

மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அதிகாரி என்.ஜீவேஸ்வரா நாளை புதன்கிழமை காங்கேசன்துறைக் கைதிகள் தடுப்பு முகாமுக்குச் சென்று அங்குள்ள கைதிகளைப் பார்வையிடவுள்ளார்.

அத்துடன் கைதிகளின் உறவினர்களால்அவர்களுக்கு வழங்கப்படும் உணவு மற்றும் கடிதங்களையும் அவர் எடுத்துச்சென்று கையளிப்பார்.

(இ-10)

## வெளிநாட்டிலிரு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடி நிலையை அடுத்து ஜனாதிஜபதி அவசரமாக நேற்று நாடு திரும்ப இருந்ததாக முன்னர் தெரிவிக்கப்பட்டிருந்தது. எனினும் மேலும் சில தினங்கள் அவர் வெளிநாட்டிலேயே தங்குவார் என்று அரசாங்க வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

வெளிநாடு ஒன்றில் தங்கியுள்ள ஜனாதிபதியும் இந்தியாவில் தங்கியுள்ள ரணில் விக்கிரமசிங்கவும் இன்று நாடு திரும்புவார்கள் என்று மற்றொரு தகவல் தெரிவித்தது.

(ஐ-7-8)

# இரத்தம் வழங்குமாறு மீண்டும் கோரிக்கை

கொழும்பு,ஏப்.25

யாழ். குடாநாட்டில் தீவிரமடைந்துள்ள யுத்தம் காரணமாகக் காயமடையும் படையினருக்குச் சிகிச்சையளிப்பதற்கு இரத்த தானம் செய்யுமாறு பொதுமக்களிடம் மீண்டும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாகச் சுகாதார அமைச்சு நேற்று மாலை விடுத்த விசேட அறிவிப்பு ஒன்றில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

வடபகுதி யுத்தத்தில் காயமடையும் படையினருக்குச் சிகிச்சையளிக்க இரத்ததானம் செய்யுமாறு விடுத்த வேண்டுகோளை அடுத்து இதுவரை ஆயிரத்துக்கும் அதிகமானோர் இரத்ததானம் செய்துள்ளனர்.

பொதுமக்கள் இரத்ததானம் செய்வதற்கு வசதியாக நாட்டின் தேசிய ஆஸ்பத்திரிகள் யாவும் 24 மணிநேரமும் இயங்குகின்றன. இந்த வசதியைப் பயன்படுத்தி மக்கள் நாட்டுக்குச் சேவையாற்ற வேண்டும்- என்று உள்ளது. (ஐ-7)

## கணனிப் பயிற்சி

முறைசாராக் கல்விப் பிரிவின் கீழ் காரைநகர் கலாநிதி ஆ.தியாகராஜா மத்திய மகாவித் தியாலயத்தில் நடைபெறவுள்ள இரண்டாவது தொகுதி கணனிப் பயிற்சி நெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. (இ-73)

## இரு சிப்பாய்கள் உயிரிழப்பு

வன்னி பம்பைமடுப் பகுதியில் நேற்று முன்தினம் படையினர் பயணம் செய்த உழவு இயந்திரம் ஒன்று புலிகளின் கண்ணிவெடியில் சிக்கியதில் இரு படையினர் உயிரிழந்தனர் என்றும் மேலும் நான்கு படையினர் காயமடைந்ததாகவும் பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது. (ஐ-7-8)

## சக்திமிக்க 5 ஆட்லறிகளை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆர்.பி.ஜீக்கள், இலகு இயந்திரத் துப்பாக்கிகள், கைக்குண்டு செலுத்திகள், வெடிமருந்து வகைகள், கவசவாகனங்கள், புல்டோசர்கள், டிரக்குகள், நீர்த் தாங்கி வாகனங்கள், பிக்கப் வாகனங்கள், பஸ்கள் என்பனவற்றையும் ஆனையிறவுத் தளத்தில் இருந்து மீட்டதாகவும் புலிகளின் வானொலி தெரிவித்தது.

ஈழப் போரின் வரலாற்றில் ஆட்லறிப் பீரங்கிகள் படையினரிடம் இருந்து கைப்பற்றப்பட்ட மூன்றாவது சம்பவம் இதுவாகும். 152 மில்லி மீற்றர் ஆட்லறிப் பீரங்கிகள் கூடுதலான வெடிப் பொருள்களை -43 கிலோ கிராம் எடை கொண்ட எறிகணைகளை -17 கிலோ மீற்றர் தூரம் சென்று தாக்கக் கூடிய வீச்சுக் கொண்டவை.

'வெற்றி உறுதி' படை நடவடிக்கையை முன்னெடுப்பதற்காகச் சீனாவிடம் இருந்து இந்த ஆட்லறிகளை அரசு கொள்வனவு செய்திருந்தது.

'ஓயாத அலைகள்-1' நடவடிக்கையின்போது முல்லைத்தீவுத் தளத்தில் இருந்து 122 மில்லி மீற்றர் ஆட்லறிகள் இரண்டை முதற்தடவையாகப் புலிகள் கைப்பற்றினர்.

இதன் பின்னர் மட்டக்களப்பு புளுக்குணாவையில் 85 மில்லி மீற்றர் ஆட்லறிப் பீரங்கி இரண்டாவது தடவையாகக் கைப்பற்றப்பட்டது. தற்போது மூன்றாவது தடவையாகக் குடாநாட்டுப் போர் முனையில் சக்தி வாய்ந்த ஐந்து ஆட்லறிப் பீரங்கிகள் கைப்பற்றப்பட்டுள்ளன- என்றும் புலிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

எனினும் -

தங்களது ஆட்லறிகளில் ஒன்று கூடப் புலிகளின் கைகளில் சிக்கவில்லை என்று இராணுவத் தளபதி ஸ்ரீலால் வீரசூரியா கூறினார்.

"நான்கு பீரங்கிகளை மட்டுமே கைவிட்டு வந்தோம். அவையனைத்தையும் புலிகள் பயன்படுத்த முடியாமல் அழித்துவிட்டே வந்துள்ளோம்"- என்றும் அவர் சொன்னார்.

ஒரேயொரு பீரங்கி மட்டும் புலிகளிடம் சிக்கியிருக்கக்கூடும் என இராணுவப் பேச்சாளர் தெரிவித்தார். (உ-ஐ-6-8)

## யாழ்ப்பாணத்தை இராணுவம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களை மாற்றி அமைப்பது யுத்ததந்திரங்களில் அடங்கும். யுத்த நிலைமை, படையினரின் நிலைமை ஆகியவற்றின் அடிப்படையில் இத்தகைய முடிவுகளை எடுக்க வேண்டும்.

நாங்கள் யாழ்ப்பாணம் முதல் ஆனையிறவு வரை மிக நீண்ட பிரதேசத்தை எமது கட்டுப்பாட்டில் வைத்திருந்தோம். இவ்வாறு நீண்ட பிரதேசத்தை வைத்திருப்பது கள நிலைமையில் எமக்கு பாதகமான அம்சம் எனக் கருதி, சூழ்நிலையை சாதகமாக மாற்றுவதற்காக ஆனையிறவுப் பகுதியை விட்டுவிலகுவது என தீவிர ஆராய்வின் பின்னர் முடிவு செய்தோம்.

அங்கு சுமார் 7முதல் 8 கிலோ மீற்றர் விலகியமை ஒரு நடைமுறைச் சரிப்படுத்தலே.

சிலவேளைகளில் பொருத்தமான விதத்தில் - தந்திரோபாய முறைகளைப் பின்பற்றுவது அவசியம். சில இடங்களைக் கைவிடுவது என்று தீர்மானித்து திட்டமிட்டோம். அதற்கேற்ப படை நிலைகளை மாற்றி அமைத்தோம்.

சுமார் அறுநூறு, எழுநூறு புலிகளைக் கொண்ட மூன்று குழுக்கள் ஆனையிறவைச் சூழ படையினர் மீது தாக்குதல்களை நடத்தின. படையினர் முற்றுகைக்கு உள்ளாகக் கூடிய நிலைமை உருவாக இருந்தது.

எங்களைத் தோற்கடித்து ஆனையிறவு முகாமைக் கைப்பற்றியதாக புலிகள் கூறுவதற்கு இடமில்லை. முகாமைக் கைவிடுவது என்பது எமது முடிவு. எமது முடிவை நாம் செயற்படுத்தினோம்; அதற்கேற்ப துருப்புக்களை நகர்த்தினோம். அவ்வளவுதான்.

கடந்த ஐந்து மாதங்களாக ஆனையிறவுப் பகுதியை நோக்கி புலிகள் நெருக்குதல் கொடுத்தார்கள் என்பது உண்மையே. நாங்கள் எதற்கும் தயாராகவே இருந்தோம். நாம் விரும்பியிருந்தால் ஐந்து மாதங்களுக்கு முன்னரே அங்கிருந்து விலகியிருந்திருக்கலாம். ஆனால் அப்படிச் செய்திருந்தால் இந்த ஐந்து மாதகாலத்தில் புலிகளுக்கு இவ்வளவு ஆயுத, ஆளணி இழப்பை நாம் ஏற்படுத்தியிருக்க முடியாது.

கடந்த டிசெம்பர் தொடக்கம் மார்ச் 26 வரை சுமார் ஐந்நூறு புலிகளை இராணுவத்தரப்பினால் அழித்துள்ளோம். இது தவிர விமானப்படை, கடற்படைத் தாக்குதல்களினாலும் மேலும் பல புலிகள் கொல்லப்பட்டுள்ளனர். மார்ச் 26ஆம் திகதி தொடக்கம் ஏப்ரல் 21 வரை 368 புலிகளைக் கொன்றுள்ளோம். அத்தோடு புலிகள் தரப்பில் பல நூற்றுக்கணக்கானோர் காயமடைந்துள்ளனர்.

இவ்வளவையும் இழந்துதான் புலிகள் ஆனையிறவுக்கு வந்துள்ளனர். புலிகளுக்கு இவ்வளவு இழப்பையும் ஏற்படுத்திய பின்னர் சரியான சமயத்தில் எங்களுக்கு சாதகமான நிலையை கருதி - அங்கிருந்து நகர்ந்துள்ளோம்.

இந்தச் சமரில் எமது தரப்பில் 8 அதிகாரிகள் உட்பட 80பேர் உயிரிழந்துள்ளனர். 19அதிகாரிகள் உட்பட 438 பேர் காயமடைந்துள்ளனர். மேலும் நூறிலும் சற்றுக் கூடிய எண்ணிக்கையானோரைக் காணவில்லை. அவர்களில் 17 பேர் இன்று (திங்கள்) மாலை கூட பாதுகாப்பாகத் திரும்பி வந்து சேர்ந்துள்ளனர்.

ஆனையிறவை கைவிட்டதால் படையினரின் போரிடும் ஆற்றல் பாதிக்கப்படவில்லை; மாறாக அவர்களது ஆற்றல் அதிகரித்துள்ளது. அவர்களின் மனோதிடமும் சற்றும் குறையவில்லை.

புலிகள் தற்போது ஆனையிறவில் முகாமிட்டுள்ளனரா என்பது எமக்கு தெரியாது. ஆனால் அப்படி முகாமிட்டிருக்க வாய்ப்பில்லை. இன்று முழு நாளும் ஆனையிறவு முகாம் மீது விமானத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தைத் தக்க வைத்திருப்பது எமது பொறுப்பு. நாங்கள் எங்களால் இயன்றதைச் செய்வோம். யாழ்ப்பாணத்தைத் தக்க வைக்க முடியும் என்பதில் எமக்கு நல்ல நம்பிக்கை உண்டு.

இலங்கை இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வே இறுதியானது - என்றார்.

(உ-ஐ-7-8)

## பாரிய பதில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கையினால் புலிகளின் முன்னேற்றம் தடுக்கப்பட்டுள்ளது. இந்த நேரத்தில் வடக்கில் யுத்தத்தில் ஈடுபட்டுள்ள படையினரின் மனவலிமையை அதிகரிக்கச் செய்வதே நாட்டு மக்கள் அனைவரினதும் கடமை ஆகும். படையினர் எதிர்நோக்கும் முக்கிய பிரச்சினை ஆளணிப் பற்றாக்குறையே. இளைஞர்களை இராணுவத்தில் இணைய உற்சாகப்படுத்துவதே பெற்றோரதும் மற்றும் பொதுமக்களதும் கடமையாகும் என்றும் பிரிகேடியர் பாலித தெரிவித்தார். (ஐ-6-7-8)

## ஆனையிறவு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மான பின்னடைவு ஆகும்.

பெரும் எண்ணிக்கையான உயிர்கள் பலி கொள்ளப்பட்டுள்ளன; மேலும் பலா காணாமற் போயுள்ளனர்.

ஒரு பூரண விசாரணை நடத்தும் படியும் -

அங்கு என்ன நடந்தது என்பது பற்றிய உண்மைத் தகவல்கள் மட்டும் அடங்கிய விரிவான அறிக்கை ஒன்றை வெளியிடும் படியும் -

நாம் அரசைக் கோருகின்றோம்.

தற்போதைய அரசியல் பின்னணியில் அரசியல் பேச்சுவார்த்தைகளில் இந்த விவகாரம் பெரும் தாக்கத்தை ஏற்படுத்த வல்லது.

எனவே இந்த விடயம் குறித்து விவாதிப்பதற்காக நாடாளுமன்றத்தை உடன் கூட்டுமாறு அரசை நாம் கோருகின்றோம் என்று தெரிவித்தார். (ஐ-உ-7-8)


இன்றைய ஓடியோ CD வெளியீடுகள்

★ வல்லரசு
★ உலகெல்லாம் ஒரு சொல்
★ தனி மலர்
★ ராஜகாளி அம்மன்
★ அப்பு
★ குஷி
★ வைஷ்ணவி
★ அதே மனிதன்
★ கண்ணன் வருவான்
★ புத்திசிகாமணி
★ மாயாஜாலம்

மூர்த்தி வீடியோ சென்ரர்
மானிப்பாய்.
T.P No.2884 (C/11956)

எலைற்
கல்வி நிறுவனம்
192, கச்சேரி நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம்.
O/L DAY CLASS
வழமையான ஆசிரியர்குழு
பிரிவு - 2
ஆரம்பம்: 28-04-2000
வெள்ளி காலை 8.00 மணி
(75728) நிர்வாகி.

இணுவில்
பொருளியற் கல்லூரி
(மத்தியகல்லூரிக்கு முன்பாக)
A/L - 2000
நாடகமும் அரங்கியலும்
யாழ் ஆசிரியர்
திரு - சுகந்தன்
பரீட்சையுடன் கூடிய மீட்டல் வினாவிடை.
ஆரம்பம்:- 25-04-2000
(செவ்வாய் 3.00)
Note: இந்த ஆசிரியர் இந்நிறுவனத்தில் மட்டுமே கற்பிப்பார்
(75724)

A/L 2002
பொருளியல்
எஸ். வரதராஜன்
* பிரிவு I சனி ஞாயிறு } 11-12
* பிரிவு II சனி ஞாயிறு } 1-2
பிரிவு II ஆரம்பம்:
29-04-2000 1.00 (ப.நே).
பொருளியற் கல்லூரி
நாவலர் வீதி,
யாழ்ப்பாணம். (75723)

"விவாத கள அரங்க அளிக்கையும்
(Forum theatre)
அதன் அழகியல் பிரச்சினைகளும்"

இடம் :- கைலாசபதி கலையரங்கு
காலம் :- 26.04.2000 புதன்கிழமை பிற்பகல் 2 மணி

கலை வட்டம்
நுண்கலைத் துறை
யாழ். பல்கலைக்கழகம்
(C/11957)

JAFFNA TECHNICAL INSTITUTE
No.7, PALALY ROAD, JAFFNA.
JAFFNA TECHNICAL INSTITUTE SRILANKA
IN VIEW OF OUR 21st ANNIVERSARY
தனது வெற்றிகரமான 21ஆவது வருட சேவைப் பூர்த்தியினை முன்னிட்டு வழங்கும்
விசேட சலுகை!
கட்டணத்தில் 25% கழிவு
COMPUTER COURSES
விவரங்களுக்கு - DIRECTOR

விக்னா கல்வி நிறுவனம்
O/L DAY CLASS
பிரிவு 3 ( 8.30 - 2.00)
அனுமதிகள் வழங்கப்படுகின்றன.
பிரிவு 4 மிக விரைவில் (75730)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 25-04-2000 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.